

# ரமணோதயம்

ஜூலை 2024

காலாண்டு

அருணை விஜய இதழ்

விலை ₹ 20

# ஸ்ரீ ரமணாஸ்ரம நூற்றாண்டு விழா

நாள் :: 17 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை காலை

இடம் :: குசலாம்பாள் கல்யாண மண்டபம்

No. 24 மேக் நிக்கோலஸ் சாலை

சேத்துப்பட்டு - சென்னை 600031

(சேத்துப்பட்டு மேம்பாலம் மற்றும் மேத்தா ஹாஸ்பிடல் அருகில்)

நேரம் : காலை 09:30 முதல் மதியம் 01:00 மணி வரை

## நிகழ்ச்சி நிரல்

குத்து விளக்கு ஏற்றி பகவான் ரமணர் அருளிய
அருணாசல அக்ஷரமணமாலை கூட்டுப் பாராயணம்

### முகவுரை

டாக்டர். வேங்கட் S ரமணன், தலைவர், ஸ்ரீ ரமணாஸ்ரமம்

### சிறப்பு உரை

இசைஞானி இளையராஜா

### இசை நிகழ்ச்சி

சிக்கில் குருசரன் மற்றும் குழுவினர்

### பாராட்டுதல்

நிறைவாகக் கலந்துகொள்ளும் அன்பர்கள் அனைவருக்கும்
மதிய உணவுப் பிரசாதம் வழங்கப்படும்.

அனுமதி கட்டணம் எதுவும் இல்லை;
பக்தர்கள் அனைவரும் பங்கு கொள்ளலாம்.

உதயம் 23 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2024

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

• கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

• கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.

• மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அருணை விஜய இதழ், ஜூலை 2024


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | இனிவரும் திருநாட்கள் | | 12 |
| 3 | என். ஆர். கே (3) | வி. நிரஞ்சன் | 13 |
| 4 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 25 |
| 5 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 31 |
| 6 | ரமண புராணம் | ஆகுரா | 39 |
| 7 | தட்சிணாமூர்த்தி தோத்திரம் சிதம்பர குற்றாலம் | | 47 |
| | வேதாந்த விசாரம் - அத்தியாயம்-9 | ஏ.வி. ராஜகோபாலன் | 57 |
| 6 | தலைவிதியும் துன்பங்களும் | குமார் ராஜா | 65 |
| 7 | அண்ணாமலைச் சாரலில் ஶ்ரீரமணாஸ்ரமம் | | 75 |
| 11 | செய்திகள் | | 77 |

# ஆசிரியர் உரை

## பொன்னும் பூஷணமும்

பகவான் ஒரு வெண்பா வேந்தர். சிறந்த மொழி பெயர்ப்பாளர். பல சம்ஸ்கிருத நூல்களை அழகாகத் தமிழில், சுவை குன்றாமல், ஏன் சுவையை மேலும் கூட்டி மொழிமாற்றம் செய்துள்ளார். அவருடைய மொழிபெயர்ப்பு நூல்களில் மிகச் சிறந்தது தேவிகாலோத்தர ஞானாசார விசாரப் படலம். யாருடைய துணை சிறிதும் இன்றி, தானாகவே இந்நூலை பகவான் மொழிபெயர்ப்பு செய்துள்ளார். ஏன் இந்த நூலின்மீது உங்கட்கு இவ்வளவு பிரியம் என்று வினவியபோது, பகவான், கேவலம் பிரம்மத்தைப் பற்றியே சொல்லி மற்றவை எல்லாவற்றையும் விட்டுவிடு என்று தொடர்ந்து சொல்லி, வஸ்து லக்ஷணத்தை உறுதிப்படுத்தி, மற்றவற்றின் பற்றை விட்டு ஒழிப்பதற்காக மனத்தை சஞ்சலத்தில் இருந்து மீளச் செய்துள்ளபடியால் என்று விளக்கினார் பகவான்.

ஆன்மிகப் பரிணாமம் என்பது முழுமை அடைவதே. குறையுடைய மனதில் ஆசை தோன்றுகின்றது. முழுமை இல்லாத குறை உடைமையே எல்லா ஆசைகட்கும், அவற்றின் விளைவான அவலங்கட்கும் அடிப்படை. இந்த பரிபூரணத்துவத்தை, முழுமையை எங்கே காண்பது? பிரம்மம் எனப்படும் அழிவற்ற நித்திய வஸ்து ஒன்றில் மட்டுமே முழுமையைக் காண முடியும். சங்கரரின் ‘ஸ்வாத்ம பிரகாஸிகா’ என்னும் நூலில்

*"பூர்ணானந்தோ ஜகத் வ்யாப்ய*
*ததானந்தம் ந வாஞ்சதி" (11)*

*முழுமையை அடைந்தவன், பிரம்ம தத்துவத்தில் ஒன்றாகிறான். பூர்ணத்துவம் அடைகிறான். அவனுக்கு வேறு எதுவுமே தேவையில்லை.*

*"பிரம்ம வித் ப்ரம்மைவ பவதி"*


*ப்ரம்மத்தை அறிந்தவன் பிரம்மமாகவே ஆகிறான். தன்னைத் தவிர வேறு 'வஸ்து' என்று எதுவுமே இல்லாத பூர்ணத்துவத்தில் ஏனைய எதற்குமே இடமில்லை.*

*மனித இனம் இடைவிடாது தான் விரும்பும் பொருட்களை நோக்கி ஓடிக் கொண்டு இருக்கிறது. ஏனெனில் வெளிப் பொருட்களின் மூலமே ஆனந்தம் வருகிறது என்ற தவறான எண்ணம் அவன் உள்ளத்தில் குடி இருக்கிறது. அவன் தேடுவது நிரந்தரமான இன்பம். வெளிப் பொருட்களோ அநித்யமானவை. அநித்யமான உலகப் பொருட்களில் இருந்து நித்யமான ஆனந்தம் கிடைக்குமோ?*

*பகவான் இதன் தொடர்பில் கூறும் பாடலைக் காண்போம்:*

*ஒருநாய் சுடுகாட்டிற்குப் போய் சதைப் பற்று முழுவதும் எரிந்துபோன ஒரு கூர்மையான எலும்பைக் கண்டு அதை வாயிலிட்டு பல்லால் கடித்தபோது, கூர்மையான எலும்பு குத்த, வாயிலிருந்து ரத்தம் வருகிறது. அதைத் சுவைத்த நாய், ரத்தம் வாயிலிருந்து வருகிறது என்பதை அறியாமல், அந்த ரத்தமும், அதன் சுவையும் எலும்பில் இருந்து வருகிறது என்று எண்ணிக் கொண்டு மேலும் மேலும் கடித்து மேலும் எலும்பு குத்தி, வாய் புண்ணாகி ரத்தம் வந்தாலும் உண்மையை உணராத அந்த நாய் மீண்டும் மீண்டும் கடிக்கும் செயலையே தொடர்ந்தது.*

*வறட்டெலும்பு கவ்வித்தன் வாய்நனிபுண் ணாகப்*
*பறட்டுப் பறட்டெனத்தன் பல்லாற் கறித்துமகிழ்ந்*



*தென்புபோ லின்சுவைவே றின்றெனவப் புண்ணீராற்*
*புன்புலநாய் போற்றும் புகழ்ந்து.*

*- (குருவாசகக் கோவை, 585)*

இதுபோன்றே மனிதனும் மீண்டும் மீண்டும் எலும்பைக் கடித்த நாய்போல் வெளிப் பொருட்களைத் தேடுவதிலேயே அதற்காக உழைப்பதிலேயே தன் வாழ்நாள் முழுவதும் செலவிடுகிறான். நிலத்தில் தடுமாறுகின்ற ஒருவன் உறுதியான ஒன்றினைப் பற்றிக் கொண்டு அதன்மூலம் நிலைபெற்று முன்னேற முயன்றால் வெற்றி பெறுவான். அவா மிக்க வாழ்க்கை எனப்படும் சிறிய நிலையற்ற பாதையில் செல்லும் மனிதனுக்கு என்றும் நிலைபெற்ற அழியா பற்றுக் கோடு ஒன்று தேவைப்படுகிறது. அதுவே ஸத்குரு என்னும் பற்றுக் கோடு. குருநாதனே நித்ய வஸ்துவின் ப்ரத்யக்ஷ தோற்றம்.

நித்யமான ஒன்றினைப் பற்றிப் பகவான் பகவத்கீதா சாரம் 8 ஆவது பாடலில் விளக்குகிறார்.

*எதனால் நிறைவெய்துமே இவையாவும்*
*அது அழிவில்லாதது அறிவாய் எதனாலும்*
*மாளாத அப்பொருளை மாளச் செயவல்ல*
*வாளாகான் ஆரும் அறி.*

காணக் கூடிய இவ்வுலகம் அனைத்தும் எதனால் வியாபிக்கப்பட்டு நிறைவு அடைந்து பொருந்துமோ அந்த வஸ்துவே அழிவற்றதென்று அறிவாய். எதைக் கொண்டும் அழிக்க முடியாத அந்த ஆத்மாவை அழிக்கக்கூடிய வல்லமையாளன் யாரும் இல்லை.

பகவான் இதனை விளக்கும்போது ஒருபொருள் ஓர் இடத்தில் இருந்து அகற்ற வேண்டுமெனில், (அதைக் கை கொடுத்து நீக்க) சிறிதாவது இடைவெளி இருந்தால்தான் முடியும். எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஆத்மாவை (இடைவெளியே எதுவும் இல்லாததால்) அதை எங்கும் கை கொடுத்து அகற்றி அழியச் செய்ய இயலாது. ஆத்மா நித்ய வெளியில் பிரசித்தி பெற்ற கீதா ஸ்லோகமாகிய,

*“நாஸதோ வித்ய தே பாவ:*
*நாபாவே வித்யதே ஸத:”*

என்பதனைத் தேர்ந்து தமிழாக்கம் செய்யும்போது இங்ஙனம் கூறுகிறார். இல்லாதாகிய பொய்ம்மை பொருளுக்கு இருப்பு என்பதே இல்லை. உளதாகிய மெய்ப் பொருளுக்கு எப்போதும் இல்லாமை என்ற நிலையே இல்லை எனவே அநித்யமான பொருளை ‘அஸத்’ என்றும் நித்யமான பொருளையே ‘ஸத்’ என்றும் இரண்டின் உண்மையை தனது உள்ளுணர்வால் அறிபவனே மெய்ஞ்ஞானி என்று தெளிவாகக் கூறுகிறார். அவரே ஏகான்ம பஞ்சகத்தில் கூறியபடி, பொன்னை அணிகலனாகச் செய்வதற்கு முன்னும் அது பொன்னே. உருக்கிய உலோகமும் பொன்னே. ஆபரணமாக உருமாறினாலும் அது பொன்னே. உருவாக்கப்பட்ட ஆபரணம் அநித்யம். அதற்குத்தான்

அழிவு நேர்கிறதே தவிர அடிப்படையாய் உள்ள பொன்னிற்கு அழிவே இல்லை. அதேபோல் ஜீவன் அறியாமையால் தன்னை வெவ்வேறு நிலையற்ற வஸ்துக்களுடன் தொடர்பு கொண்டாலும் அடிப்படையாய் உள்ள ஆத்மா நிரந்தரமானது. இதனை ஆராய்ந்து அறிவாய் என மேற்கண்ட கீதை பாடல் மொழிமாற்றப் பாடலில் பகவான் கூறுகிறார்.

உலக வாழ்வில் பல்வேறு விதமான பேதங்களைக் கற்பித்து, உலகத்தை பேத மயமாக்குவதைக் காண்கிறோம். நமக்குள்ளே உண்டாகும் எல்லாவிதமான சண்டைகளும், வேறுபாடுகளும் நிலையற்ற கற்பனையினால்தான் உருவெடுக்கின்றன. உண்மையில் பரிசுத்தமான ஆன்மாவில் அவை அனைத்தும் கற்பனையான கற்பிதங்கள் என்று அறிந்தோமானால் நிலையற்றதை விடுத்து, நித்யத்தை நாடுவோம் என்று ஆத்ம போதம் நூல் மொழிபெயர்ப்பின் 11 ஆவது பாடலில் பகவான் கூறுகிறார்.

"பலவாம் உபாதிகள் பற்றியே நாமம்
குலமா சிரமமுதற் கொள்கை சலத்தில்
சுவைநிறம் ஆதிபோல் சுத்த ஆன்மாவில்
அவை கற்பிதமாம் அறி."

இந்தப் பாடலில் பகவான் குலம், பெயர், ஆசிரமம் போன்ற வேறுபாடுகள் உடலை அடிப்படையாகக் கொண்டவை. ஆத்மாவிற்கு இத்தகைய வேறுபாடுகள் இல்லை. அப்படி இருந்தும் நாம் தேகத்தையும் ஆன்மாவையும் உண்மையில் உணர முடியாத அறியாமையினால், உடல் தொடர்பான வேறுபாடுகள் எல்லாம் ஆன்மாவில் உள்ள வேறுபாடுகள் என்று எண்ணிக் குழம்புகின்றோம். உண்மையில் நீருக்கு நிறமோ சுவையோ மனமோ கிடையாது. ஆனால் வேறுபட்ட இடங்களில் தண்ணீரைப் பார்க்கும்போது அது ஒவ்வொரு இடத்திலும் வெவ்வேறு

நிறத்துடனும், வெவ்வேறு அமைப்புடனும், வெவ்வேறு மனத்துடனும் காணப்படுகிறது. இவை எதுவுமே நீரின் அடிப்படை குணம் அல்ல. பிற சேர்க்கையினால் ஏற்பட்ட மாற்றங்கள். அதேபோன்று சுத்த ஆத்மா நிர்மலமானது; நித்யமானது. அதில் காணும் மாறுபாடுகள் யாவும் கற்பனையாய் உள்ள பொய்த் தோற்றங்கள். நாம் ஆன்மாவை உண்மையில் உணரும்போது அவை அனைத்தும் மறைந்து போகும் என்கிறார் பகவான்.

அதேபோன்று ஆன்ம போதம் 16 ஆவது பாடலினை விளக்கும்போது உமியுடன் கூடிய நெல்லை உலக்கையால் நன்றாகக் குத்தி அரிசியைப் பிரித்து எடுப்பதுபோல் பஞ்ச கோசங்களின் உள்ளே பிரகாசிக்கும் ஆத்மாவை சுருதி யுக்திகளாலும், சாஸ்திர விசாரங்களாலும் (வேதஉபநிஷத்களாலும், சாஸ்திரங்கள் காட்டும் வழியில் ஆத்ம விசாரணை) பஞ்ச கோசங்களை நீக்கி, உள்ளே ஒளிரும் ஆன்மாவை கண்டறிவாய் என்று கூறுகிறார். உள்நோக்கித் திரும்பிய விசாரத்தினால், அநித்யமான பஞ்ச கோசங்களை நீக்கி ஆத்மாவை அறியலாம் என்கிறார் பகவான்.

“திரும்பி அகந்தனை தினமகக் கண் காண்
தெரியும் என்றனையென் அருணாசலா”

- (அக்ஷரமணமாலை, 44)

எங்ஙனம் ஆன்ம விசாரணை செய்வது என்ற கேள்விக்கு பகவான் விடை அருளுகிறார்.

தேகம் நானல்ல, இந்திரியங்கள் நானல்ல என்ற வேதாந்த வாசகங்களால் எல்லா உபாதிகளையும் நீக்கி விட்டால் எஞ்சி இருப்பது ஒன்றே. அதுதான் ஆன்மா இது நான், அது நான் என்கின்ற உபாதி உணர்வுதான் ஆத்மாவை மறைத்துக் கொண்டிருக்கிறது. மறைப்பு நீங்க வேண்டுமானால் நன்கு ஆத்ம விசாரம் செய்து குருவின் வழிகாட்டுதலின்படி வேதாந்த சிரவணம்,

*மனனம் இடைவிடாது ஆன்மிக ஆராய்ச்சி போன்ற வழியில் ஈடுபட வேண்டும். இந்த ஆத்ம விசாரத்தினால் மறைப்புகள் நீங்கி ஆன்மா பிரகாசிக்கும் என்று வழிகாட்டுகிறார் பகவான்.*

*இங்ஙனம் ஆன்மிகப் பயிற்சியில் பக்குவம் அடைய அடைய, நம்மை இதுகாறும் கட்டி வைத்திருந்த சங்கிலிகளை கடக்கிறோம். மனத்தின் கட்டுகள் புலன்களின் சங்கிலிகள், இடம், பொருள், ஏவலின் பந்தங்கள் இவை எதுவுமே ஆன்மாவிற்கு இல்லை என்பதை உணர்ந்து வெளியில் இருந்து வருகின்ற துக்கம், அச்சம், கோபம் எதுவுமே ஆத்மாவிற்கு இல்லாததால் அது நிரந்தரமான ஆனந்தத்தை அநுபவிக்கிறது.*

*தட்சிணாமூர்த்தி ஸ்லோகத்தின் மிக அழகாக தமது மொழிபெயர்ப்பில் பகவான் கூறுகிறார்.*

*பலதுளைக் குடத்துள் தீபப்*
*பாய்கதிர் போல் யார்ஞானம்*
*விழிமுதல் பொறிவாய்ப் பாய்ந்து*
*வெளிசரித்து அறிந்தேன் என்ன*
*விளங்கிடும் எவனைச் சார்ந்து*
*விளங்கும்இவ் அவனியாவும்*
*சலம்அறு குருவாம் அந்தத்*

*- தக்ஷிணாமூர்த்தி போற்றி (5)*

*பொருள்: நிறைய சிறு துவாரங்கள் உடைய ஒரு குடத்துள் ஒரு விளக்கு இருப்பது போன்று உடலுக்குள் ஆத்மா அறிவொளியாய், ஆன்மா ஜோதியாய் உள்ளது. ஆத்மா மனதில் பிரதிபலித்து கண், காது, மூக்கு முதலிய துவாரங்கள் வழியே ஆனந்த ஒளிக்கதிர்களாக வெளியே அனுப்புகிறது. இந்த ஒளிக் கிரணங்கள் எந்த எந்தப் பொருட்கள்மீது படுகின்றனவோ அந்தப் பொருட்களும் சிறிதே ஒளி பெறுகின்றன. புலன்களின் ஒளிக் கிரணங்களோ இந்தப் பொருட்கட்கு ஒளியைக் கொடுப்பது தாங்களே என்றும் தங்கட்கு முடிவாக*

ஒளிதருவது ஆத்மாவே என்பதையும் அறியாமல், அந்த வெளிப் பொருட்களில் ஒளியும், மயக்கம் இருப்பதாகவும் தாங்கள் அவற்றைத் தொட்டு அவற்றில் இருந்து ஆனந்தம் பெறுவதாகவும் நினைத்து மகிழ்கின்றன. உண்மையில் ஆனந்தப் பெருங்கடலான ஆத்மாவில் இருந்தே இவ்வானந்தம் பிறக்கிறது என்பதை உபநிடதம் விளக்குவதை பகவத் பாதர் இங்ஙனம் எடுத்துக் கூறுகிறார்.

நாம் இதுகாறும் கண்டவரை நிலையற்ற இன்பம் தரும் செயல்களிலும், அவாக்களிலும் ஒடுங்குவது நம்மை நிலையான அமைதியையும், ஆனந்தத்தையும் தரும் ஆத்மாவில் சேர்க்க உதவாது. இந்த உறுதிப்பாட்டை சாமானியன் அல்ல, யமதேவனே கூறுகிறார்.

“ஜானாம்யஹம் சேவதிரித்யநித்யம்
ந ஹ்யத்ருவை: ப்ராப்யதே ஹி த்ருவம் தத்
ததோ மயா நசிகேதச் சிதோக்னி
அநித்யைர் த்ரவ்யை: ப்ராப்தவானஸ்மி நித்யம்”

பொருள்: கர்மாவால் வரும் செல்வம், பதவி, புகழ் போன்றவை நிலையற்றவை என்பதை நான் அறிவேன். நிலைத்து நிற்கும் ஆத்மாவை அடைய அவற்றால் முடியாது. அதற்கு உதாரணம் நானேதான். நசிகேத யாகத்தைச் செய்த நான், அவா வசப்பட்டு நிலையற்ற இந்த யம பதவியை அடைந்துள்ளேன். தேவ பதவிகூட நிலையற்றது. முற்பிறவியிலே செய்த புண்ணியங்கள் கழிந்தபின், மீண்டும் பிறவி எடுத்துதான் வர வேண்டும். எனவே நிலையான ஆத்ம சாட்சாத்காரத்தை மட்டுமே தேடுக.

எது நிரந்தரம். எது நிரந்தரமற்றது என்பது பகுத்து அறிவது விவேகம். நமக்கு நாளை என்ன ஏற்படுமோ என்கின்ற பயம் த்வைத உணர்வால் ஏற்படுகிறது.

“த்விதீயா த்வை பயம் பவதி”

இரண்டாவதாக ஒன்று இருந்தால் பயம் ஏற்படும். நித்யமான ஆன்மாவைத் தவிர இரண்டாவதாக வேறு ஒன்று இல்லை என்பதை பகவான் தெள்ளத் தெளிவாக அறிந்து உணர்த்துகிறார்.

1896 மற்றும் 1905 ஆம் ஆண்டுகளில் உக்கிரமான ப்ளேக் நோய் திருவண்ணாமலையைத் தாக்கியது. ஊரே அச்சத்தில் வீடுகளைக் காலி செய்துவிட்டுச் சென்றது. நித்ய பரம்பொருள் நானே என்று உணர்ந்து இருந்த பகவான் அஞ்சா நெஞ்சராய் அருணாசலத்தை விட்டு நீங்காமல் அமர்ந்து இருந்தார்.

ஆத்மா ஒன்றே நித்யம்; மற்றவை அனைத்தும் நிலையற்றது பகவானின் என்ற பேரமைதி, ஒரு ராஜநாகம் உடல்மேல் ஏறிச் சென்ற பின்னரும், அச்சம் சிறிதுமின்றி 'சில்லென இருந்தது' என்று சொல்ல வைத்தது. விருபாட்சி குகையில் வாயிலில் வேங்கை வந்தபோதும், அணுக்கத் தொண்டர் வாசுதேவ சாஸ்திரி அச்சத்தில் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் பகவானை வெளியே விட்டு உள்ளே தாழ் போட்டுக் கொண்ட போதும், புலியிடம் வாசுதேவன் பயப்படுகிறான் பார்! போயிட்டு வா! என்று ஆதுரத்துடன் புலியிடம் கூறி, பின்னர் வாசுதேவ சாஸ்திரியையே, நகைச்சுவை மிளிர, 'உத்தர குமாரன்' என்று பெயர் சூட்டி அழைத்து வந்தார்.

நாம் ஆரம்பத்தில் கூறியபடி, உலக வாழ்வீல் பற்றுக் கொண்டு விஷய வஸ்துக்களை அடைய வேண்டுமே என்ற ஆவலுடன் சதா கர்மத்தில் ஈடுபடுவது முழுமையைத் தராது.

**"யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்**
**அதனின் அதனின் இலன்."**

என்று திருக்குறள் வழிகாட்டுவது போல, பகவானும், எந்தெந்த விஷய வஸ்துக்களின்மீது கொண்டுள்ள

ஆசையை நீ விடுகிறாயோ, விஷய வஸ்துக்களின் பற்று வைத்தலால் வரும் துன்பமே உன்னை அடையாது அனைத்து வஸ்துக்களின் மீதுள்ள ஆசைகளை நீக்கியவுடன் ஆன்ம விசாரணை மூலம் பூர்ணத்துவம் எய்துவாய் என்று உபதேசிக்கிறார்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

அனைத்தையும் விட்ட பகவானைப் பற்றிக் கொள்ளுங்கள். அனைத்து பற்றுக்களையும் நீக்க அதுவே வழி.

மீண்டும் உரையாடலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# இனிவரும் திருநாட்கள் 2024

| பூஜை/ விழா/பண்டிகை | ஆங்கில தேதி | |
|---|---|---|
| குரு பூர்ணிமா | 21-07-2024 | ஞாயிறு |
| பகவான் அருணையடைந்த தினம் | 01-09-2024 | ஞாயிறு |
| நவராத்திரி விழா தொடக்கம் | 03-10-2024 | வியாழன் |
| சரஸ்வதிபூஜை | 12-10-2024 | சனி |
| விஜயதசமி | 12-10-2024 | சனி |
| தீபாவளி | 31-10-2024 | வியாழன் |
| கார்த்திகை தீபோற்சவம் துவக்கம் | 04-12-2024 | புதன் |
| கார்த்திகை தீபம் | 13-12-2024 | வெள்ளி |
| பகவான் 145 ஆவது ஜயந்தி | 17-12-2024 | செவ்வாய் |

# என்.ஆர்.கே.3

## வி.நிரஞ்சன்

*உலகு அறிவு ஒன்றாய் உதித்து ஒடுங்குமேனும்*
*உலகு அறிவு தன்னால் ஒளிரும் உலகு அறிவு*
*தோன்றி மறைதற்கு இடனாய்த் தோன்றி மறையாது*
*ஒளிரும் பூன்றமாம் அஃதே பொருள்*

*உள்ளது நாற்பது 7*

*இயல்பிற்கு மாறாகிய மனோ மய காட்சிகள், உடல் அனுபவங்கள், தாங்க முடியாத அதிர்ச்சி, இவற்றோடு கூடி குடும்பத்தை விட்டு அண்ணாமலையின் காடுகளில் ஒடுங்கிவிடுவது என்று ஓர் எண்ணம் எழுச்சி உறுகின்ற தருணம் பகவான் என்.ஆர்.கே.யை மதுரைக்கே திருப்பி அனுப்புகின்றார். அடைய வேண்டிய முக்தியை குடும்பத்தில் இருந்துகொண்டே கல்லூரி வேலை பார்த்துக் கொண்டே அடையலாம் என்று ஓர் உறுதியையும் என்.ஆர்.கே.க்கு அளிக்கின்றார். 1950 ஏப்ரல் 14 இரவு அன்று பகவான் கொடுத்த உறுதி உண்மையாகிறது.*

*என்.ஆர்.கே. மதுரை திரும்புகின்றார். அவருடைய உடலும் மனமும் இயல்பு நிலைக்குத் திரும்பவில்லை. கல்லூரியில் பாடம் கற்பிப்பதற்குரிய சக்தி திரும்பியபாடில்லை. ஆதலால் கல்லூரி திறப்பதற்கு சில நாட்கள் முன்பு அவர் மீண்டும் அண்ணாமலை வருகின்றார். பகவானோ எளிமையே உருவாய் வீற்றிருந்தார். பகவானிடம் பேச அஞ்சிய என்.ஆர்.கே. அன்று காலையில் இருந்து மாலை வரை அன்னையாரின் கோவிலில் அமர்ந்து இருந்தவாறு ஞானவாசிட்டம் என்னும் நூலின் பாடல்களைப் படித்துக்கொண்டே இருந்தார். மாலை நெருங்குகின்ற சமயத்தில் ஒரு முக்கிய உளவு ஒன்றை ஒரு பாடலில் கண்டார்.*

ஓர் எண்ணத்தில் இருந்து இன்னோர் எண்ணத்திற்கு மனம் செல்லும் பொழுது இடையில் உள்ள அதி நுண்ணிய சுத்த வெளியே ஆன்ம உணர்வு என அதில் விளக்கப்பட்டு இருக்கின்றது. எண்ணங்களின் சூனியமே ஆன்ம உணர்வு என்றும், இரு எண்ணங்களுக்கு இடையில் உள்ள சூனியமே ஆன்ம உணர்வு என்றும் தெரிந்து கொண்டதில் வியப்பும் மகிழ்வும் அடைந்தார். அந்த மன மகிழ்வுடனேயே இரவில் மதுரை திரும்புகின்றார்.

கல்லூரி வேலைக்கு எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் போகின்றது. பகவானின் அருள், நிழல் போல் தொடர்கின்றது.

அவர் சொல்லிக்கொள்ளாமல் வீட்டை விட்டு துறவி ஆகிவிடுவாரோ என்கின்ற பயம் அவரது மனைவி இடத்தே இருந்தது. மனைவிக்கு பயம் தீர்க்கும் முகமாக அவர் மனைவியாரிடம் மாணிக்கவாசகரின் திருவெம்பாவை என்னும் பாடல் தொகுப்பை கொடுத்து படித்துவருமாறு அவரை சாந்தப்படுத்துகின்றார். பின்னர் ஒரு நிகழ்வின் போது பகவான் என்.ஆர்.கே.யின் மனைவியின் கையில் இருந்த அந்தப் பாடல் தொகுப்பினைக் கண்டு விசாரித்து அவரது மனைவியாரை தொடர்ந்து படித்துவரச் சொல்லி பயம் கொள்ளவேண்டாம் என்றும் அமைதிப்படுத்துகின்றார்,

என்.ஆர்.கே.யின் ராம மந்திர செபம் தொடர்கின்றது. அவருடைய உறவினர் வயது முதிர்ந்த அம்மையார் அவருக்கு உருத்திராக்ஷ மாலை ஒன்றை அளிக்கின்றார். ஆதலால் என்.ஆர்.கே. கல்லூரிக்குச் செல்லும் போதும் வேலையில் ஈடுபடும் போதும் தவிர்த்து மற்ற சமயங்களில் மாலையோடு கூடி ராம நாமத்தை இடைவிடாது செய்துவந்தார். உன் மனதை வாயாக்கி ராம நாமத்தை இடைவிடாது செய்து வா. என்பதே அவருக்கு ரமணர் காட்டிய வழி. அதில் முனைப்பு

உள்ளவர் ஆனார். ஐந்து ஆண்டுகளுக்குள் எண்பது மில்லியன் தடவை ராம நாமம் செபிக்கப் பட்டது என்கின்றார்.

பழம் பிறவியின் நற்பயன்களாலும் பகவானது அருளாலும் சாதனையில் மெதுவாக முன்னேறி வருகின்றார். ராம நாமத்தை இடைவிடாமல் எப்போதும் செபிக்கும் அவர் பகவானது சன்னிதியை அணுகும்போது போது எல்லாம் செபம் அடங்கி மனம் அமைதி உறுவதை உணர்கிறார். பகவானது சன்னிதியை விட்டு விலகும் போது தானாகவே செபம் மீண்டும் தொடர்வதையும் காண்கின்றார். பகவானின் சன்னிதியின் பேரமைதியின் விளைவாகவே செபம் செய்யும் மனோ விருத்தியும் தானாகவே ஒடுங்குவதை உணர்கின்றார். பல ஆண்டுகள் இடைவிடாது செய்து வரும் செபம் நீங்கி ஓர் அமைதியினை அடைகின்றார். அதுவும் வியப்பாக இருக்க, அவரது இல்லத்திற்கு வந்த ஆசிரமத்தில் சமையல் கட்டில் பணியாற்றி வரும் சாந்தம்மாளிடம் இது பற்றிக் கூறினார். அம்மாள் அது நல்ல அறிகுறி என்றும் இது வரை செய்து வந்த செபம் சகுண அதிர்வுகளோடு சொல்லப்பட்டது என்றும் இப்போது குணம் கடந்த நிர்குண நிலையில் அதிர்வுகள் அற்ற சாந்தத்தில் அவரது மனம் ஐக்கியப்பட்டு நிர்குண செபமாகி விட்டிருக்கின்றது என்றும் விளக்கினார். என்.ஆர்.கே. தெளிவடைகின்றார்.

உடலின் நடு மார்புப் பகுதியில் வலப்புறமாக ஆன்ம இதய ஸ்புரணம் விளங்கிக் கொண்டிருக்கின்றது என்னும் செய்தி பகவானின் உள்ளது நாற்பது அனுபந்தப் பாடல்களிலும் ரமண கீதையிலும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதனை அறிந்த என்.ஆர். கே. பகவானிடம் அது குறித்து தனது மார்பகத்தில் அந்த ஸ்புரணத்தைத் தோற்றுவிக்கும்படி பகவானை வேண்டுகின்றார். அது எல்லாம் கற்பனையே என்றும்

*அது குறித்து எல்லாம் ஆர்வப்பட வேண்டாம் என்றும் பகவான் அவரை வழி நடத்துகின்றார். சாதனையில் முன்னேறும் ஒருவனுக்கு ஆன்மாவில் இரண்டற்று ஐக்கியப்படுவதற்கு முன் அனுபவம் ஆகி அடங்கி விடுவதாகிய ஸ்புரணத்தில் கவனம் கொள்வதும்கூட கவனச்சிதறலாம் என்கிற காரணத்தால் பகவான் அவரை அதில் ஆர்வம் கொள்வதில் இருந்து விலக்கி அருளுகின்றார்.*

*இதைப் போலவே மனம் யோகியர் பால் அடங்கவே அனுபவமாகும் இதயத் தாமரையினை உள்ளே காண்பதற்கு ஒரு சமயம் ஆர்வம் உள்ளவரானார் என்.ஆர்.கே. ஒரு கால கட்டத்தில் அந்தக் காட்சியையும் கண்டார். மேலும் உறக்கத்தில் இருந்து விழித்து எழும் பொழுதும் விழிப்பிலிருந்து உறக்கத்தில் ஆழும் பொழுதும் இடையிடும் அதி நுண்ணிய வெளியில் ஆன்ம உணர்வு அனுபவமாகும் என்று பகவான் கூறியிருந்ததால் என்.ஆர்.கே. அவ்வனுபவத்தை பெறல் வேண்டி தூங்கப் போவதற்கு முன் கண்களை மூடிக்கொண்டு மனதில் ராம செபத்தை செபித்தவாறே இருப்பார். சற்று நேரத்தில் சுற்றியுள்ள உலகம் மறைந்து அவர் உடலுக்குள் அடங்கிவிடும். உடல் இதய மத்தியில் சென்று ஒடுங்கிவிடும். மந்திர அதிர்வு ஒன்று மட்டுமே அனுபவமாகிக் கொண்டிருக்கும். பின்னர் அதுவும் ஏதொன்றும் அறியாத உறக்க நிலையின் அஞ்ஞான இருளில் சென்று அடங்கிவிடும். இதே போல் உறக்கத்தினின்றும் வெளிவருகையில் இதய மத்தியில் இருந்து செப அதிர்வுகள் தோன்றும் பின்னர் உடல் உலக உணர்வுகள் ஒன்றன் பின் ஒன்றாய் வெளிவரும். இப்படிச் செய்து வரும் ஒரு நாள் இரவு 9 மணிக்கு உறங்கப்போவதற்கு முன் வேறு ஓர் அனுபவம் நிகழ்ந்தது. மந்திர அதிர்வுகள் உறக்கத்தின் அறியாமை இருளில் அடங்கவில்லை. பதிலாக எல்லை அற்றுப் பரந்து கிடக்கும் ரோஜா நிற ஒளி வெளியில் மறைந்து*

*போயின. ஒரே சீராய்ப் பரந்து விரிந்த அவ்வெளியின் ஒவ்வொரு அணுவும் இருப்புஅறிவு உணர்வோடு ஒளிர்ந்தது. வேறு ஒன்றுமே இல்லாது போயிற்று. பளிச் என்று வந்த அது உடனேயே மறைந்ததுபோல் தோன்றியது. ஓர் அதிசயக் கணவு கண்டவர்போல் அவர் விழித்து கைக் கடியாரத்தைப் பார்த்தால் இரவு மணி பன்னிரண்டு கடந்திருந்தது.*

*ஒரு நிகழ்வில் சூனியமான தனது மனதில் இதயத் தாமரையைக் கண்டார். யோகிகள் சித்தர்கள் தங்கள் சாதனையில் அகத்தே காட்சிகளைக் காண்பது இயல்பு. ஏன் ஆறு ஆதார சக்கரங்கள் அவற்றின் அடையாளங்களாம். மலர்கள், தேவிகள் எல்லாம் அவர்களது மார்க்கத்தில் முக்கியமான படிகள். பகவானுடைய வழியோ நேர் மார்க்கம். அது மட்டும் அல்லாது 'கன்மாதி கட்டு அவிழ சன்மாதி நட்டம் எழ எம்மார்க்கம் அதனின் இம் மார்க்கம் மிக்க எளிது' என்றல்லவோ பகவான் தெளிவாகக் கூறி இருக்கின்றனர். விட்ட குறை தொட்ட குறையாக இருக்கும் சம்ஸ்காரங்கள் வலுவிழந்து அழிவதற்குள் சில அனுபவங்களையும் கொடுத்துச் செல்கின்றனவே. பகவானின் பிடியில் இருந்து என்.ஆர்.கே. தப்பவும் இல்லை: பகவானின் அருள் பாதுகாப்பினின்றும் அவர் விலகவும் இல்லை. புலி வாயில் பட்டுவிட்டார்.*

*என்.ஆர்.கே.யின் தந்தையார் குடல் இறக்கத்தின் காரணமாக ஆபத்தான நிலையில் மூன்று முறை அவதிப்பட்டார். முதல்முறை நிகழ்ந்தபொழுது திருவண்ணாமலையில் குடியிருந்து வரும் என்.ஆர்.கே.யின் சகோதரி தந்தியை எடுத்துக்கொண்டு பகவானிடம் சென்று தந்தையின் பொருட்டு பிரார்த்தித்துக் கொண்டார். பகவான், "பயப்படாதே. உன்னுடைய தந்தை நலமாக இருக்கின்றார்", என்றனர். அதே நேரத்தில் திருச்சியில் அவரது தந்தையை*

மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வந்திருந்த ஒரு மருத்துவர் அவரது தந்தையின் குடற் பகுதியை சற்று அசைத்து உள்ளே தள்ளி சரி செய்த முயற்சியில் அவரது குடல் இறக்கம் விலகி சரியாகிவிட்டது. அதன் பின்னர் மேலும் இரண்டு முறை அவரது தந்தையாருக்கு குடல் இறக்கம் ஏற்பட்டது. இரண்டாவது முறை வந்த பொழுது என்.ஆர். கே.யின் தந்தை பகவானது படத்தை வணங்கி அக்ஷரமணமாலையை மனதுக்குள் சொல்லியவாறு படுக்கையில் படுத்து இருந்தார். பகவானின் அருளால் அவர் குடல் சரியாகிவிட்டது. மூன்றாம் முறை திருவண்ணாமலையில் இருக்கும் பொழுது மீண்டும் குடல் இறக்கம் குலைந்தது. அச்சமயம் அவருக்கு அறுபத்து ஏழு வயது இருக்கும். சற்றே ஆபத்தான நிலை. அறுவை சிகிச்சை இல்லாமல் சரி செய்யமுடியாத நிலை. திருவண்ணாமலையில் அறுவை சிகிச்சைக்கான வசதிகள் மருத்துவ மனைகளில் இல்லை. வேலூர் கொண்டு செல்வது காலம் தாழ்த்துவது ஆகும்.

ஆசிரம மருத்துவமனையில் இருக்கும் அடிப்படை வசதிகளைக் கொண்டே ஆசிரம டக்டர் குப்புசாமி அய்யர் என்பார் பகவானை வணங்கி அவரது அருள் ஆசியோடு அறுவை சிகிச்சையை நல்ல முறையில் செய்து முடித்து என்.ஆர்.கே.யின் தந்தையைக் காப்பாற்ற ஒரு கருவியானார். அச்சமயம் என்.ஆர். கே. பகவானிடம் தனது தந்தையை பகவான் இரண்டு முறை காப்பாற்றியதற்கு நன்றி தெரிவித்துக் கொண்ட பொழுது பகவான் அவரை இடை மறித்து, “ஏன் இரண்டு தடவைகள் என்கின்றாய் மூன்று தடவைகள் எனச் சொல்”, என்றனர். இது என்.ஆர். கே.க்கு மிகுந்த ஆச்சரியமாகப் போயிற்று. ஏன் எனில் இரண்டாவது முறை அவரது தந்தை பாதிக்கப்பட்டபொழுது பகவானிடம் யாரும் அதைத் தெரிவிக்கவில்லை. தனக்குத் தெரிவிக்கப்படாத அந்த முறையையும் பகவான் சேர்த்து மூன்று முறை அவரது தந்தையாரை

*காப்பாற்றியதாகச் சொல்லலாமே என்று கூறியதில் இருந்து சர்வஞ்ஞன் ஆகிய பகவானின் அருள் வல்லமை என்.ஆர்.கே.க்குத் தெளிவானது.*

*1944. தனது பிள்ளைகளையும் மனைவியையும் நங்கவரத்தில் இருக்கும் தனது தந்தையின் இல்லத்தில் அவரது பாதுகாப்பில் விட்டு விட்டு என்.ஆர்.கே. ரமணாஸ்ரமத்திற்கு அன்னையாரின் மகாசமாதி நாள் சிறப்பு வழிபாடுகளில் பங்குகொள்ள வருகின்றார். விழாவின் தொடர்பாக இரண்டாயிரம் ஏழை மக்கள், ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட சாதி, சமய, இன வேறுபாடின்றி ஒரே பந்தலின் கீழ் விருந்து உண்ண வந்திருந்தனர். என்.ஆர்.கே. அலைமோதிய மக்களை கட்டுப்படுத்தி உள்ளே அனுப்பும் பணியில் இருந்தார். அப்போது கூட்டத்தில் சிக்கி விரைந்து சென்றுகொண்டிருந்த பெண் தனது குழந்தையோடு தடுமாறி கீழே விழுந்தாள். அவளோடு விழுந்த குழந்தை மூச்சுத் திணறி பேச்சற்று இருந்தது. இதை பார்த்த என்.ஆர்.கே., "எல்லோரும் விருந்து உண்டு மகிழ்வாக இருக்கும் இந்த தருணத்தில் இந்தப் பெண்ணுக்கு இப்படி ஒரு துக்கமா, பகவானே குழந்தையைக் காபாற்றுங்கள்," என்று மனம் கலங்கி பிரார்த்திக்கின்றார் அப்பொழுது ஒரு குரல். "உன் குழந்தையைத் தருகின்றாயா?" என்று கேட்கிறது. என்.ஆர்.கே. சற்றும் தாமதியாமல், "தருகிறேன்", என்று உறுதி அளித்தார் அப்புறம் தான் பதைபதைத்து, "பகவானே எனது குழந்தையும் காப்பாற்றுங்கள்", என்று வேண்டிக் கொள்கின்றார். இதற்குள் அந்தப் பெண்ணின் குழந்தை உயிர் பிழைத்தது அதை அணைத்துக்கொண்டு அந்தப் பெண் அவ்விடத்தை விட்டு அகன்றாள். பின் இதை எல்லாம் மறந்து ஆசிரம விழா முடிந்து வீடு திரும்பினார். வந்தவர் கேட்டறிந்த நிகழ்ச்சி அவரை நெகிழவைத்தது. தன்னுடைய குழந்தையை அந்தக் குழந்தைக்குப் பதில் தருவதாக ஆசிரமத்தில் இரக்கம்*

*மிகுந்து கூறி பின் தன் குழந்தையையும் பகவான் காக்கவேண்டும் என்று முறையிட்டுக் கொண்ட அதே தருணத்தில் அவரது மகன் கிணற்றில் அருகில் இருந்த சமயம் ஒரு மாடு முட்டி கிணற்றில் விழுவதில் இருந்து பகவானின் அருளால் காப்பாற்றப் படுகிறான். பகவானின் கருணையை நினைந்து கனிந்தார்.*

*1948 மார்ச். பகவானிடம் என்.ஆர்.கே. ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கின்றார். ஞானி ஒருவரின் அருள் புரிதலைப் பற்றிய கேள்வி அது.*

*என்.ஆர்.கே.: பகவானே தங்கள் எல்லையிலா அருளும் கருணையும் கூடி தங்கள் பக்தர்களின் கடுமையான உயிருக்கு ஆபத்தான நோய்களினின்றும் குணப்படுத்தி இருக்கின்றீர்கள். இதன் விளைவாக பகவானது உடல் நலம் பாதிக்கப்படுகின்றதா?*

*பகவான்: (ஆங்கிலத்தில்) ஆம். இல்லை.*

*என்.ஆர்.கே.: கூடுதல் விளக்கம் அளியுங்கள் பகவானே.*

*பகவான்: ஆன்ம ஞானம் அடைந்த பின் முக்த புருஷனுக்கு உடல் தேவை இல்லை. இருந்தும் அவன் வாழ்ந்து கொண்டிருக்கும் பொழுது பக்தர்களின் நோய்களை தனது உடலுக்குள் ஈர்த்து உறிஞ்சிக்கொள்ளும் சக்தி அவனிடம் உள்ளது. அதன் காரணமாகத் தான் அவனது உடல் அவ்வப்பொழுது பாதிக்கப்படுகின்றது. ஆம் என்று சொன்னதற்கான விளக்கம் இதுவே.*

*அவன் அமைதியான ஓர் இடத்தில் முற்றிலும் தனிமை உற்று கேவல நிர்விகல்ப சமாதியில் ஆழ்ந்தான் என்றால், உடல் உலகக் கலப்பு முற்றிலும் இல்லாது போனால், ஈர்த்து உறிஞ்சப்பட்ட வியாதிகள் அனைத்தும் சுவடு இல்லாமல் கழிந்து போகின்றன. அவன் உடல் உணர்விற்கு மீளும் பொழுது உடல் குணமடைந்து*

முன்பு போல் பழைய ஆரோக்கிய நிலையை அடையும். சமாதியில் ஆழும் கால அளவானது குணப்படுதப்பட்ட வியாதிகளின் ஆபத்து கடுமைக்கு ஏற்ப கூடும் குறையும்.

ஸ்ரீ சங்கர பகவத் பாதர் மிகுந்த இளம் வயதிலேயே ஆன்ம ஞானம் பெற்றிருந்தார். நல்ல ஆரோக்கியமும் வலுவான உடலும் கொண்டவராய் இருந்தார். சகஜ சமாதியில் இருந்தவாறே இடைவெளி அற்று கர்மங்களில் ஈடுபட்டுவந்தார். அளவிலாது அவரிடம் பொங்கும் கருணயால் கூட்டம் கூட்டமாய் அவரை நோய் நொடியால் அவத்தை உறுவோர் வந்து அணுக அணுக பல விதமான கடுமையான ஆபத்தான நோய்களினின்று விடுவித்து அவர்களுக்கு அருள் புரிந்தார். அவர் இரவும் பகலும் தொடர்ந்து இவ்வாறு செயல் பட்டுக்கொண்டிருந்தார். கேவல நிர்விகல்ப சமாதியின் தனிமையில் ஆழ்ந்து தனது உடல் நலத்தை மீட்டுகொள்ள வேண்டும் என்று சற்றும் கவலைப்பட்டாரில்லை. அதன் விளைவாக முப்பது வயதின் முதல் பகுதியிலேயே அவர் உடலை நீத்தார்.

இவ்வாறு பகவான் ஞானியரின் உலக உபகார பெரும் கருணையை விளக்கினார். முக்த புருஷனை முக்த புருஷனே அறிவார் என்பதற்கு இணங்க ஆதி சங்கரரிடம் கட்டுக்கு அடங்காது ஏதொன்றும் வேண்டாது பொங்கிய கருணையை அவரின் மாற்று உருவமாகிய பகவானே உறுதி பட விளக்குதற்கு உரியர். நாம் பெறும் இந்த விளக்கம் இம் முக்த புருஷர்கள் பால் நமது பேரன்பினைப் பெருக்கவேண்டும். அப்பேரன்பினையும் அவர்களிடமே இரந்து பெறுவோமாக.

1950 ஏப்ரல் 10. மதுரையில் இருந்து சென்னைக்கு என்.ஆர்.கே. செல்கின்றார். அரசு கல்லூரியில் இளங்கலை பட்டத்திற்குரிய தேர்வை நடத்தி அங்கேயே மதிப்பீடு செய்யும் பணி அவருக்கு இருந்தது. வழியில் திருவண்ணாமலையில் பயணத்தை முடித்துக் கொண்டு

பகவானைத் தரிசிக்கச் செல்கின்றார். பகவான் மகா சமாதி ஆவதற்குச் சில நாட்களே இருந்தன. இருந்தும் பக்தர்களுக்கு தரிசனம் கொடுத்த வண்ணமே இருந்தார் பகவான். பக்தர்களின் ஒரு பெரிய வரிசை பகவானின் அறையிலிருந்து ஆசிரம நுழைவாயில்வரை நீண்டு இருந்தது. ஒவ்வொருவரும் பகவானின் அறை வாயிற்படியில் நின்று உள்ளே படுத்தபடியே பக்தர்களைப் பார்த்தவண்ணம் இருந்த பகவானைச் சில வினாடிகள் நின்று தரிசித்து விட்டு அடுத்து வரும் பக்தருக்கு வழி கொடுத்துச் சென்றவண்ணம் இருந்தனர். என்.ஆர்.கே.யின் முறை வந்த போது ஜ்வலித்துக் கொண்டிருந்த பகவானது கண்களில் இருந்து ஊடுறுவும் பார்வை என்.ஆர்.கே.யின் உள் அவரது இருப்புணர்வின் மிக ஆழ்ந்த நுண்ணிய பகுதிகளில் ஊடுறுவியது. அது தான் பகவானை கடைசியாக என்.ஆர்.கே தரிசித்தது.

ஏப்ரல் 14. நாள் முழுவதும் கடினமான பணி. இரவு உணவை முன்னதாகவே எடுத்துக் கொண்டு என்.ஆர்.கே. தான் தங்கி இருந்த விடுதியின் தன் அறைக்கு முன்பாக இருந்த வராண்டாவில் ஒரு பென்ச்சில் படுத்து 8 மணி அளவிலேயே உறக்கத்தில் ஆழ்ந்து விட்டார். திடீரென்று அதிர்ச்சியால் குலுக்கப் பட்டு விழித்து எழுந்து தனது அறைக்குத் தலை தெறிக்க விரைந்தார். திடீரென்று கண்களைக் குருடாக்கும் அளவிற்கு பிரகாசமான மின்னல் அவரையும் அவரைச் சுற்றிய பெரு வெளியையும் அணைத்தது. இதுதான் கலவரம் அடைந்து அவர் எழுக் காரணமாய் இருந்தது. அவர் அறையை அடைந்த உடன் அந்த பிரகாசமான ஒளி அவருடைய நெஞ்சுக்குள்ளே கட்டுப்பட்டது. பின் அவரது இதய மையத்தின் உள்ளே ஒடுங்க இதய மையம் ‘அருணாசலம் அருணாசலம்’ என தொடர்ந்து அதிரத் துவங்கியது. அவருடைய உடலையே ஆட்டும் அளவிற்கு அந்த அதிர்வுகள் கடுமையான வீரியத்துடன் இருந்தன. அவர் என்ன செய்தும் அவரால் அந்த

*கடுமையான அதிர்வுகளை நிறுத்த முடியவில்லை. நல்லவேளை இந்த நேரத்தில் பொழுது விடியத் துவங்கியது. படபடப்பு தானாக ஓய்ந்துவிட்டது. காலை காஃபிக்காக வெளியே சென்றவர் சுவரொட்டியைப் பார்க்க நேர்ந்தது. பகவான் ரமண மகரிஷி நேற்று இரவு 8.48 மணிக்கு மகா நிர்வாணம் அடைந்தார் என்னும் செய்தி பெரிய எழுத்துக்களில் வெளியிடப்பட்டிருந்தது.*

*ஏப்ரல் 16. ஞாயிற்றுக் கிழமை. காலையில் ஆசிரமத்தை அடைந்து பகவான் அடக்கம் செய்யப்பட்ட புனித தலத்தில் மௌன அஞ்சலி செலுத்தியவாறு நின்று கொண்டிருந்தார். நித்திய சாந்தத்தின் நிசப்தம் இடிபோன்று வலுவாக அவர் உள்ளே நிலவுவதை உணர்ந்தார். அவருடைய இதயத்தின் கூர் மையத்தைத் தொட்டவாறு பகவானுடைய அருள் அவர் உள்ளே விரவிப் பரந்து நிறைந்துவிட்டது. அவ்வுணர்வு பகவான் அவரிடத்தே இறுதியாக விட்டுச் செல்லும் அன்புப் பரிசாக நிலைக்க ஆரம்பித்தது. எப்போதும் இருந்து கொண்டிருந்ததும் இனி மேல் எப்போதும் இருந்துகொண்டிருக்கப் போவதும் ஆகிய நித்திய மோனம் அவரிடத்தே வெளியாகியது. அவ்வருளின் உபகாரமாக சத் குரு ரமணராக இருந்தவர் யார், இருந்து கொண்டிருப்பவரும் யார் என்பதை அறிந்துகொண்டார். வாழ் நாள் முழுவதுமாகிய அவரது சாதனை எதன் பொருட்டு என்றும், எதனை அடையும் பொருட்டு அவர் தீவிரமாக இன்னாள் வரை தவித்து இருக்கின்றார் என்றும் முடிவாக அவர் தெளிவாக அறிந்துகொண்டார்.*

*வெளி அதாய் உளத்தே வேறு அற விளங்கின்*
*வேறு என வெளி வருவேன் ஆர்*
*வெளி வராய் அருணாசல அவன் தலையில்*
*விரிமலர்ப் பதத்தினை வைத்தே (அருணசல பதிகம் 7)*

*அடுத்த நாள் மதுரை திரும்பினேன். தனக்கு வேறு அறியாத சுத்த இருப்பு உணர்வு என்கின்ற*



*கரை அற்ற சாகரத்தின் உள்ளே நான் இருக்கின்றேன். உறக்கத்தின் அறியாமை விட்டுப் போய் விட்டது. உலகத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற முடிவற்ற நிழல் விளையாட்டைத் தாங்கிக் கொண்டு இருக்கும் திரையாக நான் என்.ஆர்.கே என்னும் பெயர் உடைய நிழல் உருவத்தொடு கூடி இருக்கின்றேன். காலப் போக்கில் இந்த திரையும் அதில் அடங்கிய அனித்திய நிழல்களும் சுத்த சத் சித் ஆனந்தத் தன்னில் மறைந்து விடுவன ஆம். என்.ஆர்.கே.*

*நாம உருச் சித்திரமும் பார்ப்பானும் சேர் படமும் ஆர் ஒளியும்*

***அத்தனையும் தான் ஆம் அவன்***

***- உள்ளது நாற்பது, பாடல். 1***

*[மூலம்: ரமணாஸ்ரம ஆவணம் என்.ஆர்.கே. ஆங்கில நினைவுத் தொகுப்பு;*

*The Power of the Presence Book1 by David Godman.]*

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### 25. சூனிய காலமறிதல்

*குறள் 241: நிரவி யழலுருவாய் நீண்ட வெளிகாணில்*
*அரவணையா னாகு முடம்பு.*

*பொருள்: (இப்பாடல் ராஜயோகப் பயிற்சியின் இறுதிநிலை பற்றிக் கூறுகிறது). எல்லையற்ற சிதாகாச வெளியில் தீப் பிழம்பின் வடிவான (அக்னி கலை என்று கூறப்படும்) ஆன்ம ஜோதியைக் கண்டால், நமது உடல் பரிணாமம் உற்று இறைவன் உருவாகும்.*

*விளக்கம்: 'அரவணை' என்னும் சொல்லை இருவகையில் பொருள் கொள்ளலாம். பாம்பினை அணியாய்க் கொண்டவன் போல் உடல் பரிணமிக்கும் என்பதற்கு சிவனைப் போல், அல்லது திருமாலைப் போல் சக்திஜோதி உருவமாகலாம்.*

*அரவணை அரவினை அணிந்தவன் சிவபெருமான். அரவினை படுக்கையாகக் கொண்டவன் மஹா விஷ்ணு 'அரவு' என்ற சொல்லுக்கு பாம்பு என்று நேரடிப் பொருள் கொள்ளலாம், அது குண்டலினி சக்தியைக் குறிப்பதாக சுட்டுப் பொருள் கொள்ளின் இக்குறளின் மெய்ப்பொருள் விளங்கும்.*

*குறள் 242: உருவந் தழலாக வுள்ளத்தே சென்று*
*புருவத் திடையிருந்து பார்.*

*பொருள்: எங்ஙனம் இந்த உடலை யோகத் தழல் உடலாக ஆக்கி 'நான் யார்' என்று உள்ளே சென்று அறிவது? ஔவையார் இதற்கு வழி கூறுகிறார்.*

இரு கண்களாலும் நாசியின் நுனி நோக்குக. அந்த இரண்டு கண்களும் அதற்கு மத்தியில் கீழே உள்ள நாசி நுனி நோக்க வேண்டும். இந்த போக சாதனை மேம்படும்போது, நாசி நுனியில் இருந்து ஆன்மாவை நோக்கும் பார்வை மேல் நோக்கிச் செல்லும். மேலேறிச் செல்லும் அப்பார்வை புருவ மத்தியின் வழியாக மேலே சென்று சிதாகாசத்தில் சிவஜோதி (அல்லது) ஆன்ம ஜோதியில் சென்று ஒடுங்கும்.

இந்த ஞான ஜோதி செந்தழல் போல ஜொலிப்பதை மணிவாசகர் விளக்குகிறார்.

*பந்து அணை விரலாள் பங்க நீ அல்லால்*
*பற்று நான் மற்று இலேன் கண்டாய்*
*செம் தழல் போல்வாய் சிவபுரத்து அரசே*
*திருப்பெருந்துறை உறை சிவனே*

மற்றும் திருப்பள்ளியெழுச்சியில் சிவபிரான் வடிவத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது

*செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்*
*திருப்பெருந்துறை யுறை கோயிலும் காட்டி*
*அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்!*

என்று பாடுகிறார்.

**குறள் 243: புருவத் திடையிருந்து புண்ணியைனக் காணில்**
**உருவற்று நிற்கு முடம்பு.**

பொருள்: இங்ஙனம் புருவ மத்தியில் தியானம் செய்து மேலே யோக மார்க்கத்தில் சிதாகாசம் அடைய அங்கே பரமாத்மாவான சிவதர்சனம் கிடைக்கும். அப்போது சிவத்தில் பூரணமாய்க் கரைந்து இந்த உடலே உருவமற்றுப் போய் ஜீவபோதம் சிவ போகத்தில் கரையும்.

பகவான் குருவாசகக் கோவையில் வழிகாட்டுகிறார்

*அலையுமன நீரில் அகந்தையாம் சாயை*
*அலைவதனை மாற்றுமுறையாயின் நிலைநழுவத்*

*தான்அதனை நோக்காது தன்னையே தான்குறித்து*
*மோனமுறை நிற்கை முறை.*

*- (குருவாசகக் கோவை, 1192)*

எண்ணங்களையும் பிற நிகழ்ச்சிகளையும் கவனிப்பது முன்னிலைபடர்க்கை நாடும் செயலே. சாட்சி பாவத்தைக் கடைப்பிடித்தல் என்பது ஆரம்பநிலை வழி. ஆயினும் மனம் எப்போதும் எல்லாவற்றையும் சாட்சியாகப் பார்த்திராமல் பார்க்கின்ற ‘நான்’ என்பதனைப் பார்க்க வேண்டும் என்கிறார் பகவான்.

*குறள் 244: அகம்புறம் பேராப் பொருளை யறியில்*
*உகம்பல காட்டு முடம்பு.*

பொருள்: உள்ளும் புறமும் தானாக ஞானம் வெளிப்படுவதில்லை. சத்குரு காட்டும் பாதையில் சிவயோகத்தினைப் பின்பற்றி அப்யசித்து அறியில், இப்பூத உடல் பல்வேறு யுகங்களைக் கடந்து செல்லும் ஆற்றல் பெறுகின்றது.

*குறள் 245: ஆவிபாழ் போகா தடக்கி யிருந்தபின்*
*ஓவிய மாகு முடம்பு.*

பொருள்: வாசி எனப்படும் பிராணனை பூரணம், ரேசகம் வழியே செலுத்திவிடாது, கூடியவரை கும்பக நிலையில் மூச்சினை உள்ளடக்கி நம் தேஹமானது, சித்திரத்தில் வரைந்த செந்தாமரை போன்று வாடாது, மெலியாமல் இளமையுடன் திகழும்.

விளக்கம்: பிராணனை வெளிவிடாது உள்ளே அடக்குவதால் எழும் ஆத்ம சக்தியை பகவானும் உள்ளது நாற்பது 28 ஆவது பாடலில்

*எழும்பும் அகந்தை எழுமிடத்தை நீரில்*
*விழுந்த பொருள்காண வேண்டி முழுகுதல்போல்*
*கூர்ந்தமதியால் பேச்சுமூச்சடக்கிக் கொண்டுஉள்ளே*
*ஆழ்ந்தறிய வேண்டும் அறி.*

என்று சுட்டுகிறார்.

திருமந்திரத்திலும் திருமூலர் இதே கருத்தை விளக்குகிறார்:

ஓவிய மான வுணர்வை அறிமின்கள்
பாவிக ளித்தின் பயனறி வாரில்லை
தீவினை யாமுடன் மண்டல மூன்றுக்கும்
பூவில் இருந்திடும் புண்ணியத் தண்டே (751)

பொருள்: ஜீவபோதம் நீங்கி ஓவியம்போல் நிற்கும் நிலையை அறிந்து கொள்ளுங்கள். பாவிகள் இதன் பயனை அறிந்து கொள்ள மாட்டார்கள். தீவினைக்குக் காரணமான இந்த உடலில் மூன்று மண்டலங்களும் சுழுமுனை சஹஸ்ராரம் (ஆயிரம் இதழ் கொண்ட சிரசில்) நாடியில் பொருந்தி விளங்கும்.

(மூன்று மண்டலங்கள்: சூரியன், சந்திரன், அக்னி)

குறள் 246: அஞ்சு மடக்கி யறிவோ டிருந்தபின்
துஞ்சுவ தில்லை யுடம்பு.

பொருள்: ஐம்பொறிகளின் இயக்கங்களையும் சக்தியையும் பூர்ண ஞானத்துடன் இணைக்கும்போது, ஜீவன் சிவத்துடன் ஒன்றிவிடும். அப்போது உடல் அழிவதில்லை.

குறள் 247: தீயாக வுள்ளே தெளிவுற நோக்கினில்
மாயாது பின்னை யுடம்பு.

பொருள்: உந்திக் கமலத்தில் சுடர்விடும் மணிபூரக சக்ரத்தில் தெளிவாக கருத்தை வைத்து தியானிக்க அறிவு, உணர்வுடன் ஒன்றும். அத்தகு ஞானநிலையை அடைந்து உடல் நசிக்காது.

குறள் 248: தானந்த மின்றித் தழலுற நோக்கிடில்
ஆனந்த மாகு முடம்பு.

பொருள்: தனக்கு எந்தக் குறைவும் ஏற்படாது, அக்கினிக் கலையை யோக சாதனையில் எழுப்பி உந்திக் கமலத்தில் மணிபூரணகத்தில் ஞான யோக சக்தி எப்போதும் குறையுறாது நிறைந்து இருக்க, உடல் எப்போதும் ஆனந்தத்தில் திளைக்கும்.

*குறள் 249: ஒழிவின்றி நின்ற பொருளை யுணரின்*
*அழிவின்றி நிற்கு முடம்பு.*

*பொருள்: அங்கிங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் அருளொடு நிறைந்து நிற்கும் சிவபிரானை இதயக் கமலத்தில் யோக சாதனை மூலம் கண்டால் உடல் என்றும் நசிக்காது.*

*குறள் 250: பற்றற்று நின்ற பழம்பொருளைச் சிந்திக்கில்*
*முற்று மழியா துடம்பு.*

*பொருள்: இத்தகைய யோக மார்க்கத்தைப் பின்பற்றி ஆதியந்தமில்லாத சிவபிரானை இடைவிடாது சிந்திக்க உடல் இளமை குன்றாது வாழும்.*

*விளக்கம்: திருமந்திரத்தில் வரும் பாடல் இதை எழிலுற விளக்குகிறது.*

*நாடவல் லார்க்கு நமனில்லை கேடில்லை*
*நாடவல் லார்கள் நரபதி யாய்நிற்பர்*
*தேடவல் லார்கள் தெரிந்த பொருளிது*
*கூடவல் லார்கட்குக் கூறலு மாமே (764)*

*சிவபிரானை அறிய வல்லார்க்கு வாழ்நாளின் எல்லை அகன்று விடுகிறது. அவர்கட்கு மரணமில்லை. இங்ஙனம் ஞான வழியில் சென்று இறைவனை அறிய வல்லார்கள் மக்களின் தலைவர் ஆவர். ஞான வழியில் தோய்ந்து ஆய்ந்தவர்கள் கண்ட பேருண்மை இது. சிவபிரானை அடைய வேண்டும் என்ற பேராவல் கொண்டார்க்கு இந்த உண்மையைப் பகிர்ந்தால் அவர்கட்கு பலன் கிடைக்கும்.*

---

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2024

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜூலை | 20 | சனி | மாலை 06.10 | 21 | ஞாயிறு | மாலை 04.51 |
| ஆகஸ்ட் | 19 | திங்கள் | அதிகாலை 03.07 | 20 | செவ்வாய் | அதிகாலை01.09 |
| செப்டம்பர் | 16 | திங்கள் | காலை 11.22 | 17 | செவ்வாய் | காலை 09.10 |
| அப்டோபர் | 16 | புதன் | இரவு 07.05 | 17 | வியாழன் | மாலை 05.25 |



# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## மௌனிசாது
## மொழிமாற்றம்: ராம் மோஹறன்

### 33. நம்முள் இயங்கும் சக்தி

*“வேத நூல்களை ஆழ்ந்து கற்ற பின்னரும், பரமாத்மாவை அறிய இயலவில்லை எனில், இத்தனை நூல்களைப் படித்தல் பயனற்றது. நூல்களைக் கசடறக் கற்று பரமாத்மாவை உணர்ந்த பின்னரும் நூல்களைக் கற்பதால் பயன் ஒன்றும் இல்லை. (பரமாத்மாவை உள்ளுணர்வால் மட்டுமே உய்த்துணர முடியும்.”*

*- ஆதிசங்கரரின் விவேக சூடாமணி ஸ்லோ. 61*

*ஏராளமான ஆன்மிக நூல்களைப் படித்து, அவை கொண்டுள்ள கணக்கற்ற மறைவியல் தொடர்பான நுட்பச் சொற்களை ஜீரணிக்க முயன்று குழப்பத்தில் உழலும் பல்வேறு சாதகர்கட்கு சங்கரரின் மேற்கண்ட விளக்கம் பெரும்பயன் தரும். நமது மனம்-மூளையை மட்டுமே கொண்டு ஆன்மிகத்தை அறிய முயன்றால் அப்படியே மூளைக்குப் பெரிய சுமையாய் அமைகிறது. இங்ஙனம் நூற்களின் மூலம் நுண்ணுணர்வின் மூலம் மட்டுமே அறியக் கூடிய ஆத்மிக அறிவை நம்மால் நிச்சயம் அறிய முடியாத உண்மையான ஆன்மிக ஞானம் இதயம் சார்ந்த நுண்ணறிவினால் மட்டுமே பெற முடியும்.*

*ஆன்மிக சாதனையில் முன்னேறிச் செல்பவர்கள் இந்தச் செயல்முறை உண்மையில் உள்நோக்கித் திருப்பப்படுகிறது என்பதை அறிவர். நாம் ஆத்மிக சாம்ராஜ்யத்தின் முழுமையை அடையும்போது அதைச் சார்ந்த எல்லா அமைப்புகளும், கலைச் சொற்களும்,*

அவனுக்குச் சட்டெனத் தெளிவாகிறது. ஆயினும் அந்த வினாடிவரை அந்தச் சூட்சுமம், அவனுக்குப் புலப்படாத இந்தப் பேருண்மை அவனுக்கு இப்போது உடனே புலனாகிறது. பகவானின் வாழ்க்கையே இதற்கு அற்புதமான எடுத்துக்காட்டு.

இந்த ஞானப் பேரொளி அவருள் உதயமாகும் அந்த விநாடிவரை பகவானுக்கு இந்தியத் தத்துவ நூல்களைக் குறித்து எந்தப் பரிச்சயமும் இல்லை. ஆயினும் ஞானப் பேரொளி அவளுள்ளே உதித்தபின், அனைத்து ஆன்மிகக் கருத்துக்களையும் அவர் எளிதாக உணர்ந்தார். சாதகர்களின் ஐயங்கட்கு, தமது அநுபவத்தில் இருந்தே ஒப்புயர்வற்ற விளக்கங்களை தர முடிந்தது. இது இயல்பாகவே அமைந்த பரிணாமம். இதை ஒரு உவமை மூலம் விளக்கலாம்.

ஆங்கில மொழி மட்டுமே கற்றுள்ள ஒருவனுக்கு ஃபிரெஞ்சு போன்ற வேறு ஒரு மொழியில் கூறுவதை அறிய முடியாது. ஆங்கில மொழி போன்றே ஃபிரெஞ்சு மொழியிலும் அதேபோன்றே ‘அகர முதல’ எழுத்து வரிசை இருந்தாலும் அதை அவனால் படிக்க முடியாது. அது போன்றதுதான் ஆன்மிக நூல்களைப் பயில்வதும். நாம் உபயோகிக்கும் அதே சொற்கள் ஆன்மிக அறிஞர்களால் பயன்படுத்தப் பெற்றாலும் அவை என்ன கூறுகின்றன என்பது நமக்கும் புரிவதில்லை.

“படிப்பதே பயனற்றது” என்று நான் கூற வரவில்லை. நமது உள்ளுறை ஆன்மிக அறிவு பரிணமிக்கும்போது ஞான நூல்களிலும் இக்கருத்துக்களே விளக்கப் படுவதைக் காண்கிறோம். ஏனெனில், நாம் நமது அநுபவத்தில் காண்பதையே, அவை சொற்களில் எடுத்துரைக்கின்றன. அவை நமக்கு ‘நாம் சரியான பாதையில் பயணிக்கிறோம்’ என்ற அத்தாட்சியை நல்குகின்றன. சாதகன் தன் முயற்சியில் முன்னேற முன்னேற அவன் மனக் குழப்பங்கள் மறையத்

*துவங்குகின்றன. முன்பு ஆன்மிக ஞானத்தை விளக்க அவனுக்கு கலைச் சொற்கள் நிறைந்த விஸ்தாரமான பிரசங்கம் தேவைப்பட்டது. இப்போதோ, மிக எளிமையான சொற்களில் தனது ஞானத்தையும் அநுபவத்தையும் அவனால் விளக்க முடிகிறது.*

*கிறிஸ்து, புத்தகர், மகரிஷி போன்றோர் மிக எளிய சொற்களில் ஆழ்ந்த உண்மைகளை விளக்கக் காண்கிறோம். எல்லா ஞானிகளுக்கும் இது பொது இயல்பு. இவர்தம் உபதேசங்களை தற்கால தத்துவ அறிஞருடைய, -- கிழக்கோ, மேற்கோ எங்கிருந்தாலும் சரி -- ஒப்பிட்டுப் பாருங்கள் அப்போது எது உண்மையோ அதுவே ஞானம், எது வெற்றுப் படிப்பு மட்டுமே சார்ந்துள்ள அறிவு என்று புலப்படும்.*

*தான் ஞானத்தை முற்றும் பெற்றவன் என்ற கனவுலகில் இருந்து, ஆத்மா உள்ளே பிரகாசிப்பதை அறிந்த மெய்யுணர்வு நிலைக்கு முகிழ்வதை உணர, நாம் மெய்ஞானத்தைப் பற்றிய வாலறிவைப் பெற வேண்டும். வெறும் தத்துவம் சார்ந்த நூலறிவு மட்டும் பயன்படாது.*

*ஶ்ரீ பகவான், நவீனமான விசார மார்க்கத்தை ஞானம் பெறுவதற்கான சூத்திரமாய் வழங்குவதன் மூலம் மிகப் புராதமான உபதேசமாகிய ஒரு மெய்ஞ் ஞானியின் ஒரே ஒரு சொல்லை அநுபவத்தில் பின்பற்றுவோமாயின், அது சாதகனை சச்சிதானந்தத்தின் பெருநிலைக்கு அழைத்துச் செல்லும் என்பதை நிதர்சனமாகக் காட்டுகிறார்.*

*நம் ஒவ்வொருவருக்கும் உள்ளேயும் சர்வ சக்தி வாய்ந்த அதேசமயம் நம்மால் உய்த்துணர முடியாத பேராற்றல் அடங்கி உள்ளது. இந்த உள்ளார்ந்த பேராற்றல் குறித்து மகரிஷி பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். சிறப்பாக எஃப்.*

ஹெச். ஹம்ஃப்ரீஸ்க்கு 'வழிகாட்டுதல்' என்ற தலைப்பில் தான் அருணகிரிக்கு வந்து சேர்ந்த ஆரம்ப கால நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்த பேராற்றல் இன்றி எதுவுமே நடக்காது. எனவே இதனை முழுவதுமாக வெளிக்கொணர வேண்டும். இந்தப் பேராற்றல் அனைத்து சிருஷ்டிகளிலும் ஒரே மாதிரி வெளிப்படுவதில்லை. சத்குருவிடம் வெவ்வேறு தோற்றங்களில் வெளிப்படா விடினும், ஒரு சீடனிடம் அது பல்வேறு வெளிப்பாடுகளாக பக்தி, ஞானம் போன்று பல்வேறு வெளிப்பாடுகளாக தோன்றுகின்றது. நம்மில் சிலருக்கேனும் நம்முள் பொதிந்துள்ள உலகளாவிய பகவானின் சந்நிதானத்தில் வெளிப்படுகின்ற இந்த மகாசக்தி நமக்கு அவர் அருளும் அண்டம் அளாவியா பேராற்றல். இதனுடன் ஒப்பிடுவதற்கு எதுவுமே கிடையாது என்பதை அறிய முடிகிறது. இது நமக்கு ஆசானின் அருள் வாயிலாகவே கிடைக்கிறது. அதே சமயம் இந்த மகா சக்தியை உய்த்துணர குருவின் மறைமுகமான உதவியும் கிடைக்கிறது. பரமானந்த சத்தியத்தை உணர விழையும் சாதகர் பலருக்கு சத்குருவின் மறைமுக உதவி கிடைத்து, தமது அன்பிற்குரிய சத்குருவின் இதய மாளிகையில் குடி புகுவதற்கு வழி செய்கிறது.

மனிதனது வெளியுலக மற்றும் உள்ளார்ந்த பிரச்சனைகளுக்கும் துன்பங்களுக்கும் அடிப்படைக் காரணமாம் அவனது சதா சலிப்புற்று இருக்கும் மனம் தான். இந்த மகாசக்தி நம்முள் எழும்போது, அது மனிதனது இடையறாத சலித்துக் கொண்டிருக்கும் மனதை அமைதியுறச் செய்கிறது. முழுமையான மௌனமும், சாந்தமும் எதிலிருந்து எழுமோ அந்த உள்ளார்ந்த உறுதிப்பாட்டினை அவனுக்கு இந்த மகா சக்தி அளிக்கிறது. எவர் தமது உள்ளார்ந்த மகா சக்தியை எழுப்புகிறார்களோ, அவர்கள் இந்த எழுப்புதலை இறுதிக் குறிக்கோளான 'பரத்துடன் ஒன்றுதலை'

அடையச் செய்து அதன் மூலம் மரணமில்லா பெருவாழ்வை அடையச் செய்கிறது.

ஒரு சாதகனுக்கு செய்யக்கூடிய பேருதவி, அவனுக்கு ஏராளமான உபதேசங்களையும் கோட்பாடுகளையும் வரையறைகளையும் இடையாத வழங்கி உபத்திரப்படுத்தாமல் இருப்பதே. ஏனெனில் இவை அனைத்தும் வெளியில் இருந்து வருபவையே. இவ்வனைத்தையும் விட சிறந்த வழி ஒன்று உள்ளது. அது யாதெனில், ஆச்சாரியன் தனது பேச்சினாலோ பார்வையினாலையோ, மௌனத்தினாலேயோ அல்லது சில அபூர்வமான நிகழ்வுகளினாலும் ஸ்பரிசத்தாலும் சாதகனின் உள்ளுணர்வை எழுப்பி, அவனை தனது பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைத் தானே கண்டறியச் செய்வது. அந்த நிலை சித்திக்கும்போது அத்தீர்வு அவனது வாழ்வுடன் ஒன்றிய தீர்வாக அமைகிறது. மனித வாழ்வில் பொருள் தருமாறு வருகின்ற உயரிய செயல்பாடு இது ஒன்றே.

தனது 'மகா யோகா' என்ற நூலில் முன்னுரையில் அதன் ஆசிரியர் 'யார்' நம்மை நமது பௌதிக உலகம் தொடர்பான விஞ்ஞானத்தை முதலில் மறந்து விட்டு, பின்னரே ஆன்மிகப் பாதையில் அடியெடுத்து வைக்கும்படி அறிவுறுத்துகிறார். ஏன் இவ்வாறு அறிவுறுத்துகிறார் என்பதை நாம் ஆய்ந்து உணர வேண்டும்.

ஆயினும் அது அவ்வளவு எளிதான செயலல்ல. ஏராளமான பயில்வோர்கள் தமது முன்னோர் கொள்கைகளையும் இதுகாறும் சேர்த்து வைத்த பௌதிக அறிவையும் பின்தள்ளிச் செல்ல மிகவும் சிரமப்படுகின்றனர். ஆயினும் இம் முயற்சியில் தீவிரமானவர்கள் வெற்றி பெறுகின்றனர். இங்கே ஒரு கேள்வி எழலாம், பின்னால் தூக்கி எறியப்பட்ட வேண்டிய குப்பைகளை முன்னம் ஏன் சேர்த்து

*வைத்துக் கொள்கிறோமென்று. sapienti sat என்னும் லத்தீன் வாசகம், சாதகன் தன் உள்ளுறை அறிவைக் கொண்டே, பெரும்பாலான கருத்துக்களை எந்தவிதமான விளக்கமும் தேவையில்லாமல் புரிந்து கொள்ள முடியும்.*

*ஞானம் பெறுவதில் பேரார்வம் உள்ள சாதகர்கள் தம்மால் அனைத்து சமயங்கள் பற்றிய அறிவையும் யோக முறைகள் பற்றியும் பல்வேறுபட்ட மறைபொருள் பயிற்சிகள் குறித்தும் முழுவதுமாக அறிந்து கொள்ள முடிவதில்லை என வருத்தம் கொள்கின்றனர். இவர்களுக்கு 'மகா யோக' வழங்கும் அறிவுரை யாதெனில், ஒப்புமை அறிவை நினைவிலிருந்து அகற்றும் வழிமுறை, அதை முற்றிலும் மறந்து விடுவதல்ல. அது அந்த கற்றறிவை, மூளைமனம் என்னும் பெட்டகத்தில் வைத்து பூட்டி சாவியை பத்திரமாக சட்டைப் பையில் வைத்திருத்தல் போன்றதாகும்.*

*உனக்குத் தேவையானபோது, சட்டைப் பையையோ, பெட்டகத்தையோ திறந்து, வேண்டியது எடுத்துக் கொள்ளலாம். ஓர் எச்சரிக்கை! உனது பெட்டகத்தில் வைக்கப்பட்டுள்ள தற்காலிக சொத்துக்களை, இடையறாது திறந்து திறந்து பார்த்து ஆராய்ந்து கொண்டு இருக்காதே!*

*** *** ***

*இந்த 'உலகளாவிய சக்தி' என்ற நான் குறிப்பிட்டு வருவது எது என்பதை தெரிவிக்காமல் இருப்பது சிறப்பானது என்று எண்ணுகிறேன். காலப்போக்கில் அது தானே தெரிய வரும். இதை வெளிப்படையாக அறிவிக்காமல் இருப்பதன் மூலம் தெரியாமல் ஏற்படும் தவறுகளையும் தவிர்க்கலாம். அது தனித்துவமானது; தனித்து இயங்குவது. ஒவ்வொரு மனிதனின் இதயத்திலும் மிக நெருங்கி இருப்பது.*



எந்தச் செயலையும் அது சிறப்பாக முடித்துத் தரும் என்ற நம்பிக்கை ஊட்டுவது. உன்னுடைய முயற்சியின் மூலமே அதை கண்டுபிடிக்கலாம். அதிலிருந்து வேறுபட்டதாக எதுவும் இல்லை. அதுவே உனது ஆழ்ந்த உட்பொருளாக உள்ளது. அதுவே அனைத்துக்கும் இறுதியானது. அதுவே உனக்கு எதிரில் எப்பொழுதும் ஒளிர்ந்திருக்கும் குறிக்கோள். அதுவே உன்னுடைய மாறாமல் எந்நாளும் தொடரும் நண்பன்.

மகரிஷி ஒரு முறை ஒரு மேற்கத்திய அன்பரிடம் கூறினார், ஒரு மனிதன் முதன்முறையாக உண்மையான 'நான்' என்பதை உணரும் போது அவனது இதயத்தின் அடி ஆழத்திலிருந்து ஏதோ ஒன்று எழும்புகிறது& பின்னர் அவனை அது முற்றிலுமாக தன் உடமையாக்கி கொள்கிறது. அது மனத்திற்கு அப்புறம் உள்ள ஒன்று. அது எல்லையற்றது தெய்வீகமானது நிரந்தரமானது.

நாம் காணும் நிகழ்வுகள் அனைத்தும் வினோதமானது. ஆச்சரியம் அளிப்பது. எனினும் இவை அனைத்திலும் மிகவும் சிறப்புடையது,

*நாம் இதுவரை அறியாதது ஒன்று உள்ளது. அது யாதெனில், ஏகத்துவமான ஒரே ஒரு சக்தி. எல்லையற்ற பெரும் சக்தி. நாம் காணும் இந்த தோற்றப்பாடுகள் அனைத்திற்கும் ஆதாரமானது; பொறுப்பானது. நாம் இவற்றைக் காண்பதே இந்தச் சக்தியினால் தான்.*

*உனது நேரத்தை எப்போதும் மாறிக் கொண்டிருக்கின்ற தோற்றப் பாடுகள், இறப்பு, வாழ்வு போன்றவை மீது மட்டுமே நிலை நிறுத்திக் கொள்ளாதே. அவற்றை நேராக காணுதல் மற்றும் உணர்தல் இவற்றோடு உனது எண்ணப் போக்கினை கட்டுப்பட்டு நிறுத்திக் கொள்வதே. உண்மையில் இவை அனைத்தையுமே எது காண்கிறதோ அதைக் காண முயற்சி செய். இந்த நிகழ்வுகள் தோற்றப்பாடுகள் அனைத்துக்கும் எது காரணம் என்பதை உணர்ந்து பார். மனதை அனைத்துமே காணும் ஒன்றின் மீது உறுதியாய் நிறுத்திக்கொள். அது உனக்குள்ளேயே உள்ளது.*

*நாம் காணும் இவை அனைத்தும் அந்த எல்லையற்ற சக்தியின் கூறுபட்ட நிறமாக நிறமாலைக் கதிர்களே.*

*தியானத்தில் நன்கு தேர்ந்தவன், தன்னுடைய செவிகளையும் கண்களையும் திறந்து வைத்திருந்தாலும், தன்னுடைய நோக்கை மிக உறுதியாக, எது அனைத்தையும் காண்கிறதோ அதிலேயே வைத்துள்ளான். அந்த மாபெரும் சக்தியை அவன் பௌதிக நிலையில் காண்பதோ, கேட்பதோ இல்லை. அதனுடன் அவனுக்கு பௌதிக வடிவான பிரக்ஞை*

*ஏதுமில்லை. இத்தொடர்பு அனைத்துமே ஆத்மிக நிலையில் ஏற்படுகின்றன.*

*மகரிஷியின் இந்த வார்த்தைகள் நம்முள்ளே உள்ள மகாசக்திக்கு சரியான விளக்கமாகும். இதற்குமேல் சொல்ல ஒன்றுமே இல்லை.*

# ரமண புராணம்

## ஆகுரா

### ரமண புராணம் வரிகள் (63 – 82)

*பம்பரமாய் எவ்வுயிரும் பாசத்தால் ஆட்டிவிட்டு*

***(63)***

*அம்பரமாய் நிற்கும் அதிசயச் சீராளன்*
*அனைத்தும் சுழலவும் அவ்வாறு தான் மட்டும்*
*எனைத்தும் சலியா மெய் இன்புணர்வாம் தாள் வாழ்க!*

*அம்பரம் = ஆகாயம் சீராளன் சீர்மை கொண்டவன்;*
*சலியா = இயக்கம் இல்லா, அசைவு அற்று.*

பம்பரம் ஒரு கயிற்றைக் கொண்டே ஆட்டுவிக்கப் படுகிறது. அதே போல் பம்பரமாய் எல்லா உயிர்களையும் பாசம் எனும் கயிற்றைக் கொண்டு ஆட்டிவிட்டு, தான் ஆகாயம் போல் அசைவற்று நிற்கும் அதிசய சீர்மை கொண்டவன். இவ்வாறு அனைத்து உயிர்களும் சுழற்சியில் இயங்கவும், தான் மட்டும் எல்லா காலங்களிலும் சலித்தல், அசைதல் அற்று நிலை பெற்று உள்ள மெய் இன்ப உணர்வாம் தாள் வாழ்க. இங்கு உருவ வரையறை இன்றி "மெய் இன்ப உணர்வு", என்று ஆன்மா குறிப்பிடப் பட்டுள்ளது கவனத்தில் கொள்ள வேண்டும்.

பம்பரம்

பம்பரம் இங்கு உயிர்களுக்கு ஒரு உதாரணமாகக் கொள்ளப்பட்டுள்ளது. பம்பரத்தின் சுபாவம் இதுதான். அது அசைவற்றுக் கிடக்கும். அதை ஒருவர் கயிறு

கொண்டு சுற்றி விட்டால் சுற்றும். முதலில் அதன் சுழற்சி ஆட்டுவிப்பவனின் கயிற்று விசையால் நடக்கிறது. அவ்வாறு சுழலும் போதே அதன் சுழற்சியின் விசையில் இருந்தே சக்தியைப் பெற்று மேலும் சுழல்கிறது. ஆன்மாவிலிருந்து விடுபட்ட உயிர்கள் முதலில் ஆன்மாவால் இயக்கப்பட்டு, பின்னர் அவரவர் கர்ம வினைகளின் உந்துதலால் மேலும் இயக்கம் பெறுகிறது, அதாவது மேலும் பிறப்பு இறப்பு சுழற்சியில் வேகம் கொள்கிறது.

பம்பரம் தான் வேகம் சேர்த்து இயங்கும்போது. அது தானாக நிற்காது சுழன்று கொண்டே இருக்கும். அதை வேறு ஒரு சக்தி கொண்டுதான் நிறுத்த வேண்டும்.

பம்பரம் சுழலும்போது வெளி விசையாக உராய்வு சக்தி அதன் வேகத்தைக் கெடுத்து அதன் சுழற்சியில் இருந்து வெளியேற்றி அதை நிலைக்குக் கொண்டு வருகிறது.

### நியூட்டன் இயக்க விதி

நியூட்டனின் முதல் இயக்க விதி என்ன கூறுகிறது என்று நினைவில் கொள்வோமா. இயற்பியலில், நியூட்டனின் முதல் இயக்க விதி வெளிப்புற விசை ஒன்று தாக்காத வரை இயக்க நிலையில் உள்ள ஒரு பொருள் தொடர்ந்து இயக்க நிலையிலிலேயே இருக்கும், ஓய்வில் உள்ள பொருள் ஓய்வு நிலையிலேயே இருக்கும். பம்பரமும் இந்த விதிப்படியே இயங்குகிறது. உயிர் தத்துவமும் அங்ஙனமே.

### சிவபுராண வரிகளில்

“வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க”, “பிறப்பறுக்கும் பிஞ்சகன் தன் பெய்கழல்கள் வெல்க”, என்று வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆன்மாவில் இருந்து பிரிந்த உயிர்கள் கர்ம வினைகளால் மேலும் மேலும் பிறப்பு இறப்பு சுழற்சியில் சிக்கி உழல்கின்றன. அவை தாமாக இந்த சுழற்சியில் இருந்து விடுபட்டு தன் மூலத்தானமாகிய ஆன்மாவில் ஒடுங்க முடியாது. ஆன்மாவின் அருள் ஒன்றே ஆட்கொண்டு வேகம் கெடுத்து உயிர்களை நிலைக்கு கொண்டு வர இயலும். பம்பரமும், உயிர்களும் இவ்வாறாகவே ஒப்பிடப்பட்டுள்ளது எனலாம்.

துன்னியர் வெப்பாற்றும் சுரத்துக் குளிர் மரம் போல்
(67)

தன்னியல்பில் பக்க பாதம் சற்றும் பாராட்டாது
ஆடாது அமர் நிலை அச்சாணியாம் தன்னடியிற்
கூடா நின்றார் பிறவிக் கொட்பகற்றும் கோல் வாழ்க

துன்னியர் = தன்னை அண்டியவர்; தஞ்சம் அடைந்தவர்; வெப்பு = வெப்பம் சுரம் பாலைவனம்; பக்க பாதம் = பாரபட்சம், நல்லவர் கெட்டவர், வேண்டியவர் வேண்டாதார் என்று பகுத்துப் பார்க்காமல்; அமர் நிலை = இருக்கும் நிலை, அமர்கின்ற நிலை; ஆடாது அமர் நிலை = நடு நின்ற நடு நிலை; பிறவிக் கொட்பு = பிறவிச் சூழல், பிறப்பு இறப்பு சுழற்சி.

### பேதம் அற்ற நேசம்

பாலைவனத்தில் குளிர் நிழல் அளிக்கும் மரமானது தன் அடியில் யார் வந்து கூடுகிறார்கள் என்று பார்க்காது அனைவர்க்கும் குளிர்ச்சி அளிப்பது அதன் இயல்பு. அது போன்றே வேற்றுமை பாராட்டாத தனது இயல்பில், சற்றும் இப்படி அப்படி என்று பாரபட்சம் இன்றி ஆடாமல் அசையாமல் அச்சாணியைப் போல் நின்று, தன்னை சரணாக அடைந்தாரின் பிறவிச் சுழலை, அகற்றும் செங்கோல் வாழ்க! அதாவது ஜனனம் மரணம் பிறகும் ஜனனம் என்று இனி ஒன்றும் நிகழாது ஆன்ம நிலை அருளும் (இறையரசின்) கோல் வாழ்க!

“பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க” - சிவபுராணம்.

*பிறப்பு*

பிறப்பு என்னும் தமிழ்ச் சொல்லின் சிறப்பு என்ன என்றால். பிறப்பிலேயே, இறப்பு என்னும் சொல்லும் அடக்கம். பிறக்கும் எல்லாம் இறக்கும். இறக்கும் எல்லாம் பிறக்கும். இது ஒரு சுழற்சி. பல்விருகமாய், பாம்பாய்... செல்லா நின்ற ஸ்தாவர ஜங்கமத்துள் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தல். உயிர் என்பது பிறப்பில் உள்ளது. பிற என்றால் மற்றைய, இதர எனவும் பொருள்படும்.

ஆன்மா, ஞானம் என்பது ஒன்றே எங்கும் நிறைந்து உள்ள பொருள். அது இருவேறு இன்றி மேவி எல்லை அற்ற பரம் பொருளாய் எண்ணங்களுக்கு எட்டாது ஏகனாக உள்ளது. அந்த ஏகனில் இருந்து பிற என்று இரண்டாய் உதிப்பதே பிறப்பு.

இது அகந்தையாக ஆன்மாவில் இருந்து எழும் மாயத் தோற்றம். மூலமாகிய ஆன்மாவில் இருந்து எழும் அகந்தை ஒரு உடலைப் பற்றியே இருக்கும்.

இந்த அகந்தை, “இந்த உடல் நான்” என்றே எழும். உண்மையில் அகந்தை என்று ஒன்றும் இல்லை. அது கயிற்றில் இருந்து பொய்த்தோற்றமாய் தோன்றும் பாம்பைப் போன்றது. பாம்பாகிய பொய் மறையும் போது கயிறு விளங்குவது போல், உடலுடன் கூடிய அகந்தை அதன் மூலமாகிய ஆன்மாவில் ஒடுங்கும் அந்த கணத்திலேயே ஆன்மா விளங்கும். கயிறும் பாம்பு தோற்றமும் ஒருசேர காணமுடியாது.

அதேபோல் ஆன்மாவும், உடலுடன் கூடிய உயிர் அகந்தையும் ஒருசேர விளங்காது. கயிறு இல்லையேல் பாம்புத்தோற்றம் இல்லை. ஆன்மாவே அகந்தையாகிய

பொய்த்தோற்றத்தை ஒளிர்விக்கும். உயிர் அகந்தை ஒரு உடலை விட்டு நீங்கினால் வேறு உடல் பற்றும்.

பிறப்புத் தோற்றங்கள் நான்கு வகையானது. அவை.

1. முட்டையில் தோன்றுவது (அண்டசம்)

2. வேர்வையில் தோன்றுவது (சுவேதம்)

3. வேர்களில் தோன்றுவது (உற்பிசம்)

4. கருப்பையில் தோன்றுவது (சராயுசம்).

இந்த நான்கு வகையான தோற்றத்தில் இருந்து தான் ஏழு வகையான பிறப்புகள் உண்டாகின்றன.

ஏழு வகையான பிறப்புகள் (ஜென்மங்கள்).

தாவரங்கள் 19 இலட்சம்; ஊர்வன 15 இலட்சம்; தேவர்கள் 11 இலட்சம்; நீர்வாழ்வன 10 இலட்சம்; பறவைகள் 10 இலட்சம்; விலங்குகள் 10 இலட்சம்; மனிதர்கள் 9 லட்சங்கள்; ஆக 84 இலட்சம் பிறப்புகள் நான்கு வகையான யோனி பேதங்களில் இருந்து உருவாகின்றன என்பர்.

இதனை சம்பந்தர் பெருமான்,

“உரைசேரும் எண்பத்துநான்கு நூறாயிரமாம் யோனி பேதம் நிரை சேரப் படைத்தவற்றின் உயிருக்கு உயிராய் அங்கங்கே நின்றான் கோயில்” - (திருவீழிமிழலைப் பதிகம்)

என்கிறார்.

நால்வீதி அட்டத்தோடு ஏழ் சுற்று வட்டத்தும் (71)
கால் வேகமாகப் பல் கால் மாறி ஓடி
அலை சேர்ந்து உழலும் அடியார் பிறவித் தேரை
நிலைசேர உய்த்த அருணேசன் நிலை வாழ்க!

நால் வீதி = நன்றாக அகன்ற நான்கு வழி; அட்டம் = மாடம், நிலை, அடுக்கு, Racks பன்னிலை அடுக்குகள்,

*தேரின் நான்கு வரிசை, அடுக்கு அமைப்பு. இங்கு நான்கு வழிப் பிறப்பை குறிக்கும் ஏழ் சுற்று வட்ட ஏழு வகையான வட்டச் சுழற்சி, தேரின் இடை வட்டமான அமைப்பு. இங்கு ஏழு ஜென்ம சுழற்சியைக் குறிக்கும். நிலை சேர்த்தல் = ஓடும் தேரை நிலைக்கு கொண்டுவருவது; உய்த்த = உய்வித்த.*

*முக்தி அளித்த எல்லா உயிர்களும் நால்வகையான பிறப்பு வழிகளில் தோன்றி, ஏழு வகையான ஜென்மங்களில் (84 இலட்சம்) பிறவி எடுத்து காற்றின் வேகத்தில் பல மாறுபட்ட கால்களுடன் (பிறவிகள்) அலை அலையாக உழன்று ஓடித் திரிகின்றன. அவற்றுள் உய்ய வேண்டி, பிறவிச் சூழலில் இருந்து விடுபட வேண்டி தன்னை சரண் அடைந்த அடியார்களின் பிறவித் தேரை, வேகம் கெடுத்தாண்டு நிலைக்கு, முக்தி நிலைக்கு கொண்டு வரும் அருள் நேசனாகிய அருணாசல ரமணனின் நிலைப்பாடு வாழ்க!*

*இங்கு சரணடைந்த அடியார்கள் என்று தனித்துவம் தரப்படுவது கவனிக்கத்தக்கது.*

*இங்கு நால் வீதி அட்டம் என்பதில் நான்கு வழி அடுக்குகளாக அந்தக்கரணங்கள், உட்கருவிகள், நுட்பமான உடலில் இயங்குவதாக (இறைவனால் இயக்கப்படுவது), என்பதாக பொருள் கூறப்படுவதுண்டு.*

*அந்தக்கரணம் கர்மேந்திரியங்களின் மற்றும் ஞானேந்திரியங்களின் பின்னணியில் இருந்து கொண்டு அவற்றின் செயல்களை ஒருங்கிணைத்து, நமக்கு உள்ளே இருந்து அறிவை உண்டாக்குகின்ற, கண்களுக்கு தெரியாத புலனையே அந்தக்கரணம் என்று வேத வேதாந்த சாத்திரங்கள் கூறுகின்றன.அந்தக்கரணமானது மனம், புத்தி, சித்தம் மற்றும் அகங்காரம் எனும் நான்கு வகையாக மாறுபட்டு செயல்படுகிறது. இப்படியான செயல்பாடுகள் கொண்ட ஜீவர்கள், ஏழு பிறப்புகளில் பிறவித் தேராக உழல்வது கூறப்படுகிறது. அத்தகைய*

ஜீவன்களில் தன்னை சரண் அடைந்த அடியார்களின் பிறவியை உய்வித்து அருளும் அருணேசன் நிலை வாழ்க, என்றும் பொருள் கூறப்படுகிறது,

கண்ட அளவே

பக்தி விசுவாசம் பயின்றார் தற் கண்டளவே
சித்த விசிராந்தி அருள் செம்மலடி வாழ்க ! (76)

விசுவாச பக்தி = மிகுந்த நம்பிக்கையோடு செலுத்தும் பரபத்தி (எந்த எதிர்பார்ப்பும் இன்றி செலுத்தும் பக்தி); விச்ராந்தி = அமைதி; செம்மல் = சிறந்த தலைவன், இறைவன்.

மிகுந்த நம்பிக்கையோடு பக்தியை பயிற்சி செய்பவர்களுக்கு, அதாவது எதையும் எதிர்பாராது பரபத்தி பயிலும் பக்குவர்களுக்கு, தன்னைக் கண்ட மாத்திரத்தில், உடனே மன அமைதி அருளும் சிறந்த தலைவன் பாதம் வாழ்க!

அவிரும் குரு மணி உர ஒளி

விழுமிய தக்கார் தம் மனோலயம் செய்வித்து அங்கு
அழகிய சொக்காக அவிரும் குருமணி தன்
ஞான ஒளி பெற்ற நயவர் உளமாயிகமாம்
ஏனை ஒளி பற்றாதெறிக்கும் இரண்டற்ற (80)
பர வெளியாய் ஓங்கும் உர ஒளிதான் பாழ்த்த
உருவெளியாம் இந்த உலகெல்லாம் போர்த்திடுக (82)

விழுமிய = செழித்த; உயர்ந்த தக்கார் = மேன்மக்கள். தகைமை அடைந்தவர் = நடுவு நிலையில் நடக்கும் அறிஞர்; மனோலயம் = மன ஒடுக்கம், மனம் எதாவது ஒரு அனுபவத்தில் பொருந்தி இருப்பது. மனோ நாசம் என்பது மனம் இன்றி இருத்தல்.

சொக்காக = பொன்போல்; அவிரும் = ஒளிரும், பிரகாசிக்கும்; குருமணி = குரு+மணி குருமார்களிடையே மணியாகத் திகழும் குருசிரேட்டர்.

*நயவர் = நீதி உடையோர்; உளமாய் = உள்ளமாய் இகமாம் = இகமாகிய, இந்த உலகம் பற்றிய; ஏனை ஒளி பற்றாது தெறிக்கும் = இந்த உலகின் பிறப்பாகிய மற்றைய ஒளி (ஞான ஒளி அல்லாத); பற்றாது தெறிக்கும் = அஞ்ஞான ஒளி பற்றாது தெறித்து விலக்கும்; இரண்டற்ற பர வெளி = எல்லை அற்ற ஆன்மா உரம் = வலிமை, திண்மை திடம்; பாழ்த்தல் = அழிவு அடைதல், பயன் அறுதல், பாழ்த்த பிறப்பு; உரு வெளி = நினைப்பினால் எதிரில் உள்ளது போல் தோன்றும் போலித் தோற்றம்.*

*விழுமிய தக்கார் தம் மனோலயம் செய்வித்து அங்கு அழகிய சொக்காக அவிரும் குருமணி, தன் ஞான ஒளி பெற்ற நயவர் உளமாய், இகமாம் ஏனை ஒளி பற்றாது தெறிக்கும் இரண்டற்ற பர வெளியாய் ஓங்கும் உர ஒளிதான் பாழ்த்த உருவெளியாம் இந்த உலகெல்லாம் போர்த்திடுக உயர்ந்த தகைமை அடைந்த மேலோரின் மனதை மன ஒடுக்கத்தில் ஆழ்த்தி, அங்கு பொன்போல் ஒளிரும் குரு சிரேஷ்டர் ஆனவர், தன் ஞானம், அதாவது தன் அறிவு பெற்று நடுநிலையில் நிற்போர் இதயத்தில் உளமாய் உள்ளார்.*

*இகமாகிய மற்ற மாய ஒளி பற்றாது விலக்குகின்றார். அந்த உளமே தன்னை அன்றி வேறு இல்லாத பர வெளியாய் ஓங்கி திடமாய் ஒளிர்கிறது. இந்த உரமாகிய திட ஒளி பயனற்ற போலியான அகந்தை வடிவாகிய இந்த உலகெலாம் பரவி காத்து அருளுக.*

*மேலும் மேலும்... தொடர்ந்து வளரும்*
*அவன் அருளால்...*

# தட்சிணாமூர்த்தி தோத்திரம்


## *சிதம்பர குற்றாலம்*

*பாடல் 4*

*எவன்ஒளி உண்மை இன்மை இயைபொருள்*
*இலங்கு நேரே*
*எவன்அது நீஆனாய் என்றிசைத்து உணர்த்துவன்*
*சேர்ந்தோரை*
*எவனை நேர்காணின் மீண்டும் இப்பவக்கடல்,*
*வீழ்வில்லை*
*தவர்உறு குருவாம் அந்தத் தட்சிணாமூர்த்தி போற்றி*

*எவனது ஒளி பிரகாசித்து நிலையற்ற பொருள்களின் தோற்றத்தை விளங்க வைக்கிறதோ, எவன் தன்னை அனுகியவர்களை நீயும் அதுதான் என்று உணர்த்துவனோ, தனனை உணர்ந்தவன் சம்சாரக் கடலில் வீழ்வதில்லையோ அந்தத் தவசீலர்களாலேயே அறியப்படும் குருவாம் அந்த தென்முகக் கடவுளுக்கு வணக்கம்.*

*காட்சிப் படுத்த ஒளிதேவை. இருளில் எந்தப் பொருளும் காட்சியாவதில்லை. சூரியன் உதயமானதும், இருளில் மறைந்திருந்த பொருள்களைத் தன் ஒளியால் காட்சிப் படுத்துகிறான். பொருள்கள் அனைத்தையும் பிரகாசமே ஒளிர்விக்கிறது. ஒளியே காட்சிப்படுத்துகிறது. சூரியன் மறைந்து இருள் வரும் பொழுது காட்சிகளும் மறைகின்றன. அதுபோல ஆத்மா தன் பிரகாசத்தின் பிரதிபலிப்பு ஒளியானாலேயே தோற்றங்களைக் காட்சிப்படுத்துகிறது. காணும் பொருள்கள் அனைத்திலும் ஆத்ம ஒளியே ஊடுருவி தோற்றங்களை காண்பவனுக்கு காட்டுகிறது.*



*ஒப்பு 1*

*உடலாய் உயிராய் உலகம தாகிக்*
*கடலாய் கார்முகில் நீர்பொழி வானாய்*
*இடையாய் உலப்பிலி எங்கும்தான் ஆகி*
*அடையார் பெருவழி அண்ணல் நின்றானே*
*- (திருமந்திரம் 413)*

*உலகாவும், உயிராகவும், உலகமாகவும், கடலாகவும், மழைமேகமாகவும், நீர் பொழிபவனாகவும், இவைகளின் ஊடாகவும் அழியாது எங்கும் எதிலும் நிறைந்திருப்பவனின் ஆத்ம ஒளியை வாங்கியே இவைகள் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.*

*அசையும் அசையாப் பொருள்கள அனைத்திலும் ஆத்ம ஒளியே ஊடுருவி வியாபித்துள்ளது. ஆத்மாவை அறிந்தவன் காணும் பொருள்களில் அனைத்திலும் ஊடுருவியுள்ள ஆத்ம ஒளியையே காண்கிறான். எதிலிருந்து ஒருபொருள் உண்டாகிறதோ அதில் அந்தப் பொருளின் தன்மையே இருக்கும். மண்ணிலிருந்து உருவான பானையில் மண் தன்மையிருக்கும். நீரிலிருந்து உருவானப் பனிக்கட்டியில் நீரின் தன்மை இருக்கும். பானையும் மண்ணன்றி வேறல்ல, பனிக்கட்டியும் நீரன்றி வேறல்ல என்று உணர்பவனே உள்ளதை உள்ளவாறுக் காண்பவன். அதுபோல ஆத்ம ஒளியில் பிரகாசிக்கின்ற பொருள்கள் அனைத்தும் ஆத்மாவன்றி வேறல்ல, என தெளிவு பெறுபவன் காணும் பொருள்கள் அனைத்திலும் ஆத்ம ஒளியையே காண்கின்றான். “அது நீ ஆனாய்” என்ற வேதவாக்கு இதையே உணர்த்தி பேதமற்றுப் போகச் செய்கிறது. தானே சிவமல்லால் தனிச்சிவம் வேறில்லை என்பது சான்றோர் வாக்கு. “சொரூபமே, பார்ப்பவன், பார்வை, பார்க்கப்படும் பொருள் என முப்படிவாய் வெளிப்படுகிறது”, என்கிறார் ஞானேஸ்வரர். சொரூப பிரகாசத்தின் வெளிப்பாடே பார்ப்பவனும்,*

பார்க்கப்படும் பொருளும். பார்ப்பவன் உள்ள வரை பார்ககப்படும் பொருளும் இருக்கும். பிரித்து அறிகிற அறிவு உள்ளவரை இந்த பேதம் இருக்கும். அஞ்ஞானம் அகலும் பொழுது பார்ப்பவனும் பார்க்கப்படும் பொருளும் மறைந்து ஏகமே மிஞ்சும். ஏகத்திற்கு வந்தவன் தன்னை அறிந்து தனக்கு அயலாய் எதுவுமில்லை என்ற தெளிவைப்பெறுவதால் அவன் சம்சாரக் கடலில் வீழ்வதில்லை. அவர்களே தவசீலர்கள், அவர்களாலேயே தென்முகக் கடவுளை அறிய முடியும் என்று உணரச் செய்த அந்தக் குருவுக்கு வணக்கம்.

ஒப்பு 2

நீயென நான்என வேறில்லை யென்னும் நினைவருளத்
தாயென மோன குருவாகி வந்து தடுத்துஅடிமைச்
சேய்எனக் காத்தனையே! பரமே! நின் திருவருளுக்கே
என்ன செய்யும் கைம்மாறு உளதோ? சுத்தஏழையனே.

- (தாயுமானவர், பாயப்புலி-58)

நீயும், நானும் வேறல்ல என்னும் நினைவைத் தாயாக, மௌன குருவாக, வந்து அருளினாய். மௌனம் மட்டுமே இருமையை அகற்றும் வல்லமை உடையது. இருமைத் தளையிலிருந்து விடுவித்து ஆட்கொண்டு இந்த அடிமை குழந்தையைக் காத்தாய். பரம்பொருளே இந்த ஏழைக் குழந்தையால் என்ன கைமாறு செய்துவிட முடியும் என்கிறார் தாயுமானவர். சுத்த இருப்பே சொரூபநிலை. சொரூப நிலையில் நீ, நான் என யாரும் இருப்பதில்லை. பேதமற்ற நிலையே தன்னிலை. தன்னிலிருப்பவனுக்கு இவை அனைத்தும் தன்னைத் தவிர வேறு இல்லை. “உள்ளத்தில் காண்பாய் எனில் கோவிலிலும் காண்பாய்” என்கிறார் கவிமணி. உள்ளத்தில் உணராதவரை வெளியில் உள்ளவைகள் காட்சி பொருள்கள் மட்டுமே. துவைத புத்தி உள்ளவரை சுய தரிசனம் இல்லை.

*"தன்னை அறியார் தலைவன்தனை அறியரர் முன்னை வினையின் முடிவறியார்" என்கிறது சிவபோகசாரம். தன்னை அறிந்தவர்கள் மட்டுமே தானும் தலைவனும் வேறல்ல என்பதை உணர்கிறார்கள். அவர்களே வினைப்பயன் களிலிருந்தும் விடுபடுகிறார்கள். விடுபட்டவனை சம்சாரப் பந்தங்களும் பற்றுவதில்லை. பற்று அற்றவனுக்கே அமைதியும் சாந்தியும். சாந்தி வந்தவன் நானே அவன், அவனே நான் என தன்னில் நிலைபெறுகிறான். தன்னை அறியும் அறிவே அறிவு, அன்றி பின்னை அறிவது பேயறிவாமே" என்கிறார் திருமூலர். தன்னை அணுகிய நால்வருக்கும் இதையே மௌனத்தின் மூலம் உணர்த்தினார். சுயம்பு, சொரூபம், எல்லாம் தன்னை உணர்ந்தவனை குறிக்கும் சொற்களே.*

*பாடலில் "எவனை நேர்காணின்" என்கிறார். தட்சிணாமூர்த்தி என்பதே அருவ நிலையை குறிக்கும் சொல்லே. தட்சிண+அமூர்த்தி. அமூர்த்தி என்றால் உருவம் இல்லாதவன் என்றே பொருள். உருவமற்ற அந்த தென்முகக் கடவுளை எப்படி நேர்காண முடியும். முந்தின வரியில் "அது நீ ஆனாய் என்று இசைத்து" என்கிறார். நீ மட்டுமல்ல எல்லாமும் அதுதான். எல்லாம் அதுதான் என்கிறபொழுது காட்சிக்கு வேறு பொருள்கள் இருப்பதில்லை. காட்சிகள் இல்லாதபொழுது காண்பானுக்கும் வேலையில்லை. காண்பானும் காட்சியும் அற்ற நிலையே தன்னிலை. தன்னை அறிதலே நேர்காணல்.*

*"நீ அது ஆனாய்" என்கிறபொழுது துவைதம் தொனிக்கிறது. ஆதல் எல்லாம் அங்கு இல்லை. நீ தான் அது. அதுதான் நீ. இரண்டற்ற நிலையை எடுத்துச் சொல்வதுதான் வேத வாக்கின் நோக்கம். மெய்பொருள் காண்பது அறிவு. விவாதத்திற்கிடங் கொடாமல் பகவான் தன் பாடல்களில் அது நீ என்றே சொல்கிறார்.*

ஆத்மா, பரம்பொருள் பற்றி ஞானயோகி ரத்ன குரு, "விரிந்து பரந்து எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளே உடலிலும் ஊடாகக் கலந்துள்ளது. கூட்டுக்குள் தன்னைக் குறிக்கி கொண்டதால் செயல்திறனும் வரையறைக்கு உட்பட்டு விடுகிறது. விரிந்து பரந்துள்ள கடல் நீரை கலத்தில் எடுத்து வைக்கிறோம். கடல் நீரும் கலநீரும் ஒரே பொருள்தான். ஒரே நீர் ஒரே சுவை, அளவில்தான் வித்தியாசம். கடல் நீரில் கப்பல் விடலாம், பொ'ிய மீன்கள் துள்ளித் திரியும். ஆனால் கல நீரில் அது சாத்தியமில்லை. கலத்தின் எல்லைக்குள் வந்ததால் அதன் செயலும் எல்லைக்குட்பட்டதே. கலநீரை கடல் நீரில் கலந்தால் அதுவும் கடல் நீரின் சக்தி அனைத்தையும் பெற்று விடும். அதுபோல ஆத்மாவும், பரம்பொருளும் ஒன்றுதான், உடல் உபாதியால் பிரிக்கப்பட்டுள்ளது. உடல் எல்லையை கடக்கும் பொழுது பரம்பொருளின் சக்தியைப் பெற்று விடுகிறது. பரம்பொருளே ஆத்மா, ஆத்மாவே பரம்பொருள்."

ஒப்பு

*அகண்ட பரப்பிரம்மம் அலாது அணுவுமில்லை*
*அணுவுமில்லை அணுவுமில்லை அணுவுமில்லை*
*அகண்ட பரப்பிரம்மமதே அனைத்தும் ஆகும்*
*அதுவேநீ அதுவேநான் அதுவேயாரும்*

- (ரிபுகீதை 11-33)

வேதவாக்கை பாராயணம் செய்வதோ அல்லது கீரல் விழுந்த கிராமபோன் தட்டுபோல மீண்டும் மீண்டும் உச்சரிப்பதோ உண்மையை உணர்வதற்கு உதவாது. தியானத்தில் மனம் லயமாவது போல சிறிது நேர சுகம் மட்டுமே. மனம் அழியாது. மனம் அழியாத பொழுது உண்மையை உணர உதவாது. ஒருவரின் அறிவுறுத்தல் மூலமாகவும் அறிய இயலாது. சுய முயறசியால் அனுபவ வாயிலாகவே உணர வேண்டும். இதற்கு வெளியிலிருந்து யாரும் உதவ

*முடியாது. புறத்திலுள்ளதற்கு யார் வேண்டுமானாலும் வழிகாட்டலாம். அகத்திலுள்ளதற்கு "அகம்" (சுயம்) மட்டுமே உதவ முடியும். "நீ முயற்சி செய்தால் ஆத்மா உனக்கு தேவையான உதவிகளைச் செய்யும்" என்பரர் பகவான் ரமணர். சுய முற்சியில் வந்தமைகிற அமைதியே அனுபவாசலைத் திறக்கும். "நிருபணங்களற்ற இந்நிருபணம் மௌன அட்சரங்களாலேயே புரிபடுகிறது" என்கிறார் ஞானேஸ்வரர். சொல்லற்று சும்மா இருக்கும்பொழுது வந்தமைகிற மௌனம் மட்டுமே உண்மையை உணர்த்தும் என்பதுதான் தென்முகக் கடவுளின் உபதேசம்.*

*இறுதியாக ஒரு பாடல்*

*எங்கும் மனிதர் உனைத்தேடி*
*இரவும் பகலும் அலைகின்றார்.*
*எங்கும் உள்ளது உன் வடிவாம்*
*எனினும் குருடர் காண்பாரோ?*
*எங்கும் எழுவது உன்குரலாம்*
*எனினும் செவிடர் கேட்பாரோ?*
*எங்கும் என்றும் எவ்வுயிரும்*
*யாவு மான இறைவனே.*

*- உமர்கய்யாம்,*
*தமிழாக்கம் கவிமணி தே.வி.பிள்ளை*

*பாடல் 5*

*பலதுளைக் குடத்துள் தீபப் பாய்கதிர் போல்யார் ஞானம்*
*விழிமுதல் பொறிவாய்ப் பாய்ந்து வெளிசரித்(து) அறிந்தேன் என்ன*
*விளங்கிடும் எவனைச் சார்ந்து விளங்கும்இவ் அவனி யாவும்*
*சலமறு குருவாம் அந்தத் தட்சிணா மூர்த்தி போற்றி*

*பல துளைகளையுடைய குடத்துள் உள்ள தீபக் கதிர்கள், துளைகள் வழியாக வெளியேவந்து,*

*உள்ளே உள்ள தீபத்தை உணர்த்துவதுபோல கண் முதலான பொறிகள் வழியாக தனது ஒளிக்கதிர்களை அனுப்பி வெளியே உள்ளவைகளைக் காட்சிப்படுத்தி ஒளிக்கு மூலமான தன் இருப்பை உணர்த்துகிறது. உணர்த்துகிறவனின் சுயம் பிரகாசத்தை அனுசரித்தே இந்த உலகம் பிரகாசிக்கிறது. அந்த சலனமில்லாத குருவான தென்முகக் கடவுளுக்கு வணக்கம்.*

*பலதுளைகளை உடைய குடத்துள் உள்ள தீப ஒளிக்கதிர்கள் துளைகளின் வழியாக வெளியே பரவுகிறது. வெளியே பரவும் ஒளியால் உள்ளே தீபம் இருப்பது உறுதியாகிறது. விளக்கு இல்லையேல் ஒளிக்கதிர்களும் இருப்பது இல்லை. ஒளியால் விளக்கின் இருப்பு உறுதி செய்யப்படுகிறது. அதுபோல உடலாகிய குடத்துள் சுயம் பிரகாசியாக உள்ள ஆத்ம ஒளி கண்போன்ற ஐம்பொறிகளின் வழியாக வெளிப்பட்டு உலகப் பொருள்களைக் காட்சிப்படுத்துகிறது. காட்சிகளை அறிவதின் மூலம் காட்சிப்படுத்தியவனின் இருப்பு உறுதி செய்யப்படுகிறது. சுயம் பிரகாசியின் ஒளியே காட்சிக்குக்காரணம். ஒளி இல்லையேல் இருளே நிலவும். இருளில் காட்சிக்கு இடமில்லை. காட்சிப்படுத்தியதின் மூலம் தன் இருப்பை உறுதி செய்கிறது. உடலே உலகுக்கு வாசல்.*

*குட ஒளியும் ஒளிக்கதிர்களும் பார்வைக்கு உட்பட்டவை. ஆனால் ஆத்மப் பிரகாசம் பார்வைக்குள் அடங்குவதில்லை. அதனால் வெளியில் பிரதிபலித்து வெளியிலுள்ளவைகளைக் காட்சிப் படுத்தியதின் மூலம் ஆத்மப் பிரகாசம் அறியப்படுகிறது. தனது பிரகாசத்தின் மூலம் காட்சிப் படுத்திய வடிவங்கள் வாயிலாக தன்னை விளக்கிக் கொண்டுள்ளது. இதையே "அறிந்தேன் என விளங்கிடும்" என்கிறார் சங்கரர். ஆத்மப் பிரகாசத்தாலேயே உலகம் அறியப்படுவதால் அவனைச் சார்ந்தே விளங்கும் இவ் அவனி*

*என்கிறார். இருப்பினும் அவன் சலனமில்லாதவன். “மாறிவரும் பொருள்களுக்குப் பின்னால் மாறாமல் ஒளிந்து கொண்டிருக்கும் மெய்ப்பொருளை நாம் தேடுகிறபொழுது, உலகப் பொருள்கள் அனைத்தும் தாமாக இயங்காமல் இன்னொன்றைச் சார்ந்து நிற்பவை என்பது புலனாகும்” என்கிறார் சுவாமி ரங்கநாதானந்தர். சுயப் பிரகாசத்தால் உலகைக் காட்டி காட்சிகள் மூலம் தன் இருப்பை உணர்த்திய சலனமில்லா அந்த தென்முகக் கடவுளுக்கு வணக்கம்.*

*ஒப்பு*

*உலகுஅறிவு ஒன்றாய் உதித்துஒடுங்கு மேனும்*
*உலகுஅறிவு தன்னால் ஒளிரும் - உலகஅறிவு*
*தோன்றி மறைவதற்கு இடனாய் தோன்றிமறையாது ஒளிரும்*
*பூன்றமாம் அஃதே பொருள்.*

*- (உள்ளது நாற்பது 7)*

*ஆத்மப் பிரகாசத்தை உலகிற்குப் பிரதிபலிக்கிற ஊடகம் மனம். உலகம் மனத்தாலேயே உருவாகி மனத்தாலேயே அறியப்படுவதால் இரண்டும் ஒன்றாய் உதித்து ஒன்றாய் ஒடுங்கும் என்கிறார். மனமில்லையேல் உலகுமில்லை. இந்த மனமும், உலகும் தோன்றிமறைவதற்கு இடமாக உள்ள தோற்றமும், மறைவுமில்லாத அந்தப் புரணப் பொருளே உள்ளபொருள். அந்த உள்ள பொருளின் மறைவில்லாப் பிரகாசத்தாலேயே உலகு காட்சியாகிறது.*

*- (வளரும்)*

**ரமணோதயம்**

Voluntary Services

K. *சுரேஷ் ஜானகிராமன்* *9444127770*

*ராஜேஷ்* M.S. *9840075778*



# வேதாந்த விசாரம்

## அத்தியாயம் – 9

## விசாரத்தின் பலன்

### டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன்

ஞானம் மற்றும் அதை அடையும் மார்க்கம் இவற்றைப் பற்றி பல விதமாக நாம் ஆராய்ச்சி செய்தோம். நடுவிலே சில சந்தேகங்களும் குழப்பங்களும் வந்திருக்கலாம். அவற்றை அலசி, இந்தத் தொடரைத் தலைகட்டும் தருணத்தில் இருக்கிறோம்.

பலருக்கும் வேதாந்தி என்பவனைப் பற்றி சில கருத்துக்கள் இருக்கின்றன. அவன் உறவை விட்டு விலகி இருப்பான். இன்ப துன்பங்களால் பாதிக்கப்படாதவன். உணர்ச்சிகளற்ற ஒரு கட்டையை போன்றவன். அவன் நம்மை விட்டு விலகி தூரத்தில் இருப்பவன் என்பதுதான் பலரது அபிப்பிராயம்.

இதற்கு காரணம் நமது தத்துவ நூல்கள் பலவற்றிலும் பற்றை அறுத்தல் என்பது மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. ஆனால் இது படிப்படியாக அமைவது, ஆன்மிகப் பயணத்தின் முடிவான நிலை என்பது தான் நம்முடைய முன்னோர்களின் கருத்து. இதைப் பற்றி மிக அதிகமாக விமர்சித்த பௌத்த நூல்கள் கூட 'நடுப்பாதை' என்னும் கருத்தை ஆதரித்தன என்பது குறிப்பிடத்தக்கது. இதை 'மஜ்ஜிமா பத்திபாதா' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இது மிகக் கடுமையான விரதங்கள் போன்றவற்றை விடுத்து மையமான ஒரு வாழ்க்கை நெறியை வலியுறுத்துகிறது. சிற்றின்பத்தில் பற்று வைக்காமல் அதே சமயம் உடலுக்கு தீங்கிழக்கும் கடுமையான பயிற்சிகளில் ஈடுபடாமல் மனதைப்

பக்குவப்படுத்தி வாழும் நிலையையே பௌத்தம் ஆதரித்தது.

இதன் சம காலத் தத்துவமான சமண மதம் இதை விட அதிகமான நியமங்களையும் தீவிர ஆச்சாரங்களையும் விதித்தது. அதனால் பௌத்த மத குருமார்கள் அதைத் தாக்கி விமர்சித்ததும் உண்டு. மிகச் சிறந்த அறிவாளியான நாகார்ச்சுனர் பௌத்தத்தின் போற்றத்தக்க ஞானியரில் ஒருவர். தென்னிந்தியாவில் கி.பி இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பௌத்த மத தத்துவங்களை சமஸ்கிருத மொழியில் பரப்பியவர். சிறந்த சிந்தனையாளர். இந்த மதம் மகாயானம், ஹீனயானம் என்று இரண்டாகப் பிரிந்த போது, இவர் மகாயான பௌத்தத்தைப் பின்பற்றினார். இந்த மதத்தின் நூல்கள் பல பாலி மொழியில் இயற்றப்பட்டன. ஆனால் இவர் சமஸ்கிருதத்தில் பல படைப்புகளை உருவாக்கினார். அவற்றுள் தலை சிறந்த நூல் 'மூலமத்யமகாரிகா' ஆகும். இது மாத்யமக சித்தாந்தம் என்னும் நடுநிலைப் பாதையை உரைக்கிறது. இது யதார்த்த வாழ்வின் விளிம்பில் இருந்துகொண்டே துறவறத்தின் மேலான பண்புகளை பின்பற்றும் நடுநிலைமை ஆகும். இது உலகின் சராசரி மனிதர்களுக்கு சாத்தியமாகக் கூடிய நிலை. இந்த மத்தியப் பாதை பலரையும் பௌத்தத்தின்பால் ஈர்த்தது. இவருடைய 'மூலமத்யமகாரிகா' ஓர் ஆதார நூலாகக் கருதப்படுகிறது.

இதன் பிரதிபலிப்பை, கிரேக்க தத்துவங்களில் பார்க்கிறோம். அரிஸ்டாட்டிலின், 'கோல்டன் மீன்ஸ்' (Golden Means) என்று ஒரு கோட்பாட்டை முன்வைக்கிறார். எதிலும் ஒரு நடுநிலைமையான பாதையை தேர்ந்தெடுப்பதே அவர் சொன்ன வாழ்க்கை நெறி. மிக அதிகமான பயம், அதன் மறுபுறத்தில் அசட்டுத் துணிச்சல் போன்ற எல்லை நிலைகளை அவர் மறுக்கிறார். இடைப்பட்ட ஒரு பாதையை அவர்

நமக்கு காட்டுகிறார் இந்த பாதையை பின்பற்ற அவர் பலவிதமான நெறிமுறைகளை முன் வைக்கிறார். அவற்றை அவருடைய Nicomachean Ethics என்ற நூலில் பார்க்க முடியும்.

இவற்றிற்கெல்லாம் முன்னோடியாக, இந்திய வேதாந்தத்தில் நாம் ஒரு அழகான விளக்கத்தை பார்க்கிறோம். பகவத் கீதையின் ஆறாவது அத்தியாயத்தில், கிருஷ்ண பரமாத்மா நம்முடைய அனைத்துச் செயல்களின் பரிமாணம் குறித்து ஒரு குறியீட்டை அமைக்கிறார். 'சரியான விகிதத்தில் உணவு, உறைவிடம், வாழ்க்கை நெறிமுறைகள், செயல்பாடுகள், ஓய்வு, உணர்வுகள் எல்லாம் இருக்க வேண்டும்' என்பதே அந்த விளக்கம்.

*யுக்த ஆஹார விஹாரஸ்ய யுக்த சேஷ்டஸ்ய கர்மசு।*
*யுக்த ஸ்வப்னாவபோதஸ்ய யோகொ பவதி துக்கஹா॥*

*6.17*

இந்த மிதமான பயணத்திற்கு உணர்வுகளின் கட்டுப்பாடும் மிக மிக அவசியம். இதை ஸ்திதப்ரக்ஞன் என்னும் பகுதியில் (அத்தியாயம் 2) கீதாசாரியன் விளக்குகிறான். துக்கத்தில் துவளாமல், சுகத்தில் துள்ளாமல், ஆசை, பயம், க்ரோதம் இவற்றைத் துறப்பவனே ஸ்திதப்ரக்ஞன் எனப்படுவான் (2.56)

இதுவே வேதம் கண்ட வாழ்க்கை நெறி. மிக அடிப்படையான இரண்டு நெறிகளை வேதங்கள் முன் வைக்கின்றன. அவையே 'சத்தியம்', 'ருதம்' எனப்படும். மனம்-வாக்-காயம் என்று சொல்லப்படும் இந்த எல்லா செயல்களுமே சத்தியத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதே முதல் நெறி. இது ஓரளவு சுலபமாக புரியக்கூடியது. 'ருதம்' என்பது தனிப்பட்ட மனிதனுக்கு மட்டுமல்ல, ஒரு சமுதாயம், ஒரு நாடு, ஒரு உலகம் இவை யாவும் ஒரு நல்ல ஒழுங்கு முறையிலே இயங்க வேண்டும் என்பது ருதம் என்ற

*சொல்லின் பொருள். இதை 'டிவைன் ஆர்டர்' என்று ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பார்கள். இது இயற்கைக்கு பொருத்தமான ஒரு வரம்புக்கு உட்பட்ட சமுதாயத்தை எடுத்துக்காட்டும். இந்த நெறிக்கு உட்பட்டு வாழ்பவர்கள் வேதாந்தத்தின் விளிம்பு நிலைக்குச் செல்ல ஆயத்தமாக இருக்கக் கூடிய கிரகஸ்தர்கள். இதன் பின்னர் அவரவர் தகுதிக்கு ஏற்ப அவர்களுடைய விசாரம் அமையும் என்பது தெளிவுபடுகிறது.*

*இதன் தொகுப்பாகவே புத்தர் எட்டு விதமான நெறிகளை அமைத்துக் கொடுத்தார் . இந்த 'எட்டு படி' பாதை ஒரு நல்ல வாழ்க்கைக்கு அழகான அஸ்திவாரம். செயல், பேச்சு, புரிதல், வாழ்வு, சிந்தனை என எல்லாமே சரியான விகிதாச்சாரத்தில் கலந்து ஒரு சிறந்த மனிதனை உருவாக்குகிறது. அவனே பின்னர் முக்தி நிலைக்குத் தயாராகிறான்.*

*இதற்கான விரிவான விளக்கங்களை தர்ம சாஸ்திரங்கள், அர்த்த சாஸ்திரங்கள், நீதி சாஸ்திரங்கள் என்ற மூன்று வகைப்பட்ட நிலைகளில் இந்திய சித்தாந்தம் வழிகாட்டுகிறது. இதை ஒட்டியே, காளிதாசன் ரகுவம்ச மஹாகாவியத்தில் அக்குல மன்னர்கள் 'பற்றில்லாமல் சுகத்தை அநுபவித்தனர்' என்பான். (அஸக்த: சுகமன்வபூத்). இதன் நீட்சியாகத்தான் நம்மால் அரிஸ்டாட்டலின் 'வெர்ச்சு எத்திக்ஸ்' (Virtue Ethics) என்ற விளக்கத்தை ஏற்றுக் கொள்ள முடிகிறது.*

*இவ்வாறு வேத பௌத்த கிரேக்க தத்துவங்களில் ஒரு அடிப்படையான ஒற்றுமையை நாம் பார்க்கிறோம். வேதாந்தி என்பவன் தனிப்பட்ட மனிதர் அல்ல. ஒவ்வொரு பிரஜையும் தன்னுடைய அளவில் தத்துவ விசாரம் செய்து ஒரு நல்ல பாதையை தேர்ந்தெடுத்துக் கொள்வது சிறந்தது என்பது இந்த பழமையான சித்தாந்தங்களின் எழுச்சியான வாதம்.*

காலப்போக்கில் சில எதிர் வாதங்கள் எழுந்தன. இந்தியாவிலேயே சாருவாக நிலைப்பாடுகள் மக்களை திசை திருப்பின. ஆனால் இவை மக்களிடையே அதிக செல்வாக்கை பெற முடியவில்லை.

இந்த சமயத்தில் மேலை நாடுகளில் கிரேக்க தத்துவத்திற்கு பின்னர் ஒரு இடைப்பட்ட நிலையில் மதத்தின் கோட்பாடுகளே வேதாந்தமாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதனால் பல வித விளைவுகள் ஏற்பட்டன. தத்துவ விசாரம் பின்னுக்குத் தள்ளப்பட்டு வழிபாட்டு முறைகள் முக்கியத்துவம் அடைந்தன. கிட்டத்தட்ட இந்தியாவிலும் சில நூற்றாண்டுகள் இத்தகைய சூழல் காணப்பட்டது. பின்னர் வந்த ஆதிசங்கரர் போன்ற மகான்கள் நம்மை நல்வழிப்படுத்தியதால் இந்த வேதாந்த விசாரம் ஒரு தொடர்ச்சியாக நம்மிடையே வளர்ந்து வருகிறது. ஆனால் 17, 18 ஆம் நூற்றாண்டுகளுக்கு பின்னால் ஏற்பட்ட அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்களால் நுகர்வுக் கலாச்சாரம் என்பது முக்கியத்துவத்தை அடைந்தது பணமும் பதவியும் மக்களை கவர தொடங்கின. இந்த காலகட்டத்தில்தான் கண்டதே காட்சியாகக் கொள்ளும் எக்ஸிஸ்டன்ஸியாலிசம் (Existentialism) எனும் தத்துவம் வேறூன்றத் துவங்கியது. சோரன் கிர்க்கார்ட், நீட்ஷே, ழான் பால் சாதிர், போன்ற தத்துவவாதிகள் இதற்கு ஒரு அறிவு ஜீவித்துவ வடிவம் கொடுத்து படித்த மக்களிடையே பரப்பத் தொடங்கினர். இதை ஒரு காலத்தின் கட்டாயம் என்றே சொல்லலாம்; ஏனென்றால் தொழில் புரட்சி, அதன் விளைவாகத் தோன்றிய வாழ்வு மாற்றங்கள் மற்றும் கலாசாரப் பரிவர்த்தனைகள் எல்லாமே இந்த மாற்றத்திற்கு காரணமாக அமைந்தன. இதனால் வாழ்க்கைத் தரம் உயர்ந்தாலும், மனதளவில் பல பாதிப்புகள் ஏற்பட்டன. இவற்றை விலக்கவே வேதாந்த விசாரம் உலகளவில் தேவைப்பட்டது.

இதன் சில பரிமாணங்களை முன்பே பார்த்தோம். விசாரத்தின் ஒரு மிகப் பெரும் பயன், இறைவனிடம் பயமற்றுப்போதல். அந்த சாதகன் இறைவனிடம் சண்டையிடுவான், கோபித்துக் கொள்வான். சுந்தரர் சிவ பெருமானிடம் பேசிய தம்பிரான் தோழர். ஆனால் சமயத்தில் சண்டையும் போடுவார். திருமழிசை ஆழ்வார் கும்பகோணம் செல்கிறார். பெருமாள் கோவில் இவர் போன சமயத்தில் அடைக்கப்பட்டு விட்டது. ஆழ்வாருக்குக் கோபம். 'எனக்குக் காட்சி தராமல் என்ன செய்கிறாய்? ராமாயணத்தில் வனவாச காலத்தில் நடந்து நடந்து கால்கள் நொந்து போய் விட்டனவா?' என்று கேட்கிறார் பக்தி தந்த உரிமையில்.

ரமண பகவான் இதையே வேறு விதமாக உணர்த்துகிறார். 'நான் குற்றம் பல புரிந்தவன். இத்தகையவன் உன் அருள் நாடி வந்துள்ளேன். இந்தப் பாவியையா காப்பாற்றுவது' என்று நீ சிரிக்கக் கூடாது. உன் கருணையே உனக்குச் சிறந்த அணிகலன். அதை அணிந்து கொள். பின்பு என்னைப் பார்த்தால் என் குற்றங்கள் உன் கண்களுக்குத் தெரியாது.

**நகைக்கு இடம் இலை நின் நாடிய எனை**
**அருள் நகையிட்டுப் பார்நீ அருணாசலா**

**(அக்ஷரமணமாலை 53)**

இதுவே ஞானியர் நிலை. இவர்களிடம் துவேஷம் விலகி, அன்பு மேலோங்குகிறது. தீமையையும் நன்மையாகவே பார்ப்பார்கள் இவர்கள். ஒரு உதாரணம் பார்ப்போமா.

ஒருவருக்குக் கடும் வாத நோய் கண்டது. வாட்டி வதைக்கும் அந்த நோய் நீங்க அவர் இறைவனை வழிபடுகிறார். ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுலோகங்கள்... அப்பப்பா இறைவனை நம் முன்னர் கொண்டுவந்து காட்டிவிடுகிறார். இடையிடையே

*நோய் நீங்கப் பிரார்த்தனையும் செய்கிறார். அவர் கண்முன்னால் ஆண்டவன் பிரத்யட்சமாகிறான். இதோ அந்த ஆண்டவனை என் கண் முன்னால் காண்கிறேன் (ஆக்ரே பஸ்யாமி தேஜோ) என்று ஆரம்பித்து கேஸாதி பாத வர்ணனை செய்கிறார். நம் உள்ளத்தை இந்த இன்ப துன்பங்கள் நிறைந்த பூவுலகிலிருந்து தோஜோ மயமான ஓர் உலகித்திற்கு அழைத்துச் செல்கிறார்.*

*அவர் பெயர் நாராயண பட்டத்ரி. அவர் வணங்கிய தெய்வம் குருவாயூரப்பன். 'நாராயணீயம்' அவர் இயற்றிய காவியம். நல்ல வேளையாக என்னைப் படுத்தியெடுத்த நோய்கள் அகன்றுவிட்டன என்று அவர் மகிழ வேண்டிய நேரம். இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டிய தருணம். ஆனால் அவர் செய்தது என்ன? அவர் வரிகளிலேயே பார்ப்போம்.*

*உண்மையில் இந்த நோய்கள்தான் என் நண்பர்கள். இந்த நோயின் தாக்கம் இருந்திராவிட்டால் நான் வெறும் வரட்டு சாஸ்திர விவதங்களில் வெட்டியாக என் வாழ்நாளைக் கழித்திருப்பேன். பக்தி செய்யாத பாவியாக இறுதியில் யம லோகத்தை அடைந்திருப்பேன். இவ்வாறு வாழ்க்கையை வீணடித்து இருப்பேன். என்னை வாட்டிய ரோகங்களே, உங்கள் கருணையால் அன்றோ எனக்கு இறைவனை வணங்கும் பேறு கிட்டியது.*

*இதுதான் உண்மையான வேதாந்தியின் மனப்பான்மை. ஆனால் அனைவருக்கும் இத்தகைய மனப்பான்மை வராது. அவர்கள் புண்ணியபாப காரியங்களைச் செய்பவர்கள். இடையே விசாரமும் உண்டு. அவர்களை இறைவன் கைவிட்டாலும், அவன் கருணை அவர்களைக் கைவிடாது. இதைத்தான் மிக அழகான நாடகப் பாணியில் வேதாந்த தேசிகர் வருணிக்கிறார். மேலுலகத்தில் ஒரு வழக்கு. இதில் நீதிபதி திருமலையில் உறையும் ஸ்ரீநிவாசன்.*

*துணை நீதிபதி பத்மாவதித் தாயார். நம்முடைய பாபங்களையெல்லாம் பட்டியல் போட்டு சபையோர் வாதம் புரிகிறார்கள். பாதகமான இந்தச் சூழலில் நமக்குத் துணை ஒரே ஒரு பெண் வழக்கறிஞர். அவள்தான் இறைவனின் கருணையின் வடிவமான 'தயை' என்னும் பாட்டுடைத் தலைவி. அதனால் இந்தக் காவியம் 'தயாசதகம்' என்று வழங்கப்படுகிறது.*

*பலவிதரண தக்ஷம் பக்ஷபாத அநபிஜ்ஞும்*
*ப்ரகுணம் அநுவிதேயம் ப்ராப்ய பத்மா ஸஹாயம்*
*மஹதி குண ஸமாஜே மாநபூர்வம் தயே த்வம்*
*ப்ரதிவதஸி யதார்ஹம் பாப்மநாம் மாமகாநாம் 33*

*இறைவனின் கருணை என்னும் குணம், அவனிடமே வாதாடி, நம் பாபங்களிலிருந்து நம்மை விடுவிக்கிறது என்பது எந்த அளவுக்கு தைரியம் அளிக்கும் என்று சொல்லவும் வேண்டுமோ? ஆண்டவனைக் குறித்த விசாரம்தான் இறுதியில் அவன் எல்லையற்ற கருணையைக் காட்டிக் கொடுக்கும். அதனால் நம் கிலேசங்கள் நீங்கும்; மனம் தெளிவு பெறும் என்பதுதான் இதன் உள்ளுறைப் பொருள்.*

*இத்தகைய இறைவனை நம்முள்ளே காண்பதுதான் நம் பயணத்தின் பலன். இதை சுருக்கமாக சிவவாக்கியர் என்னும் சித்தர் எடுத்துரைக்கிறார்.*

*என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்தது இல்லையே*
*என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்*
*என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லரோ*
*என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டெனே.*
*(யோக நிலை 6)*

*நாம் அறியாமல் நம்முள்ளே இருக்கும் ஒன்றை நாம் அறிவதே வேதாந்த விசாரம்.*

*இந்தத் தொடர் இத்துடன் நிறைவு பெருகிறது. இதை நம்முள்ளே புகுந்து நடத்திக் கொடுத்த ரமண ஜோதிக்கு நமஸ்காரங்கள்.*

# தலைவிதியும் துன்பங்களும்

## குமார் ராஜா

*மூலம் - தன்னறிவு*

*விதி மதி மூல விவேகம் இலார்க்கே*
*விதி மதி வெல்லும் விவாதம் விதிமதிகட்க்கு*
*ஓர் முதலாம் தன்னை உணர்ந்தார் அவை தணந்தார்*
*சார்வரோ பின்னும் அவை சாற்று*

*- உள்ளது நாற்பது 19*

விதி மதிகள் என்னும் இரண்டும் தோன்றுவதற்கு ஆதாரமாய் உள்ள அகங்காரத்தின் உண்மையை அறியாத அஞ்ஞானிகளுக்கே, விதியை மதி வெல்லுமா! மதியை விதி வெல்லுமா! என்ற வாதப் பிரதிவாதங்கள் தோன்றும். விதி, மதி எனும் இவை இரண்டிற்கும் ஆதாரமானது அகந்தை. அகந்தை போலியான மாயை. அகந்தைக்கு ஆதாரமான சத்தியம் ஆன்மா என்னும் தன்னறிவு.

அகந்தை அழிந்து தன்னறிவு பெற்றவர், அகந்தையினால் உண்டான விதி மதி இரண்டையும் அத்துடன் ஒழித்தவர் ஆவார். அதன் பின்னர், அதாவது விதி மதி இரண்டும் இல்லாமல் போனபின்னர், எது வெல்லும் என்ற விவாதம் அர்த்தமற்றுப் போகிறது.

### கர்மா வினை ஆற்றல்

ஒவ்வொரு முறை ஜீவன் துன்பங்கள் அனுபவிக்கும் போதும் பொதுவாக நொந்து போய் கூறும் ஒரு சொல், "நான் என்ன கர்மா செய்தேனோ, என் தலை விதி இப்படியாச்சே," என்பதாகவே இருக்கும். வாழ்வில் நமக்கு ஏற்படும் துன்பங்களுக்கு காரணம் விதி என்பதாகக் கொள்ளுதல் சரியா? "இந்த ஜென்மத்தில்

நான் யாருக்கும் எந்த தீங்கும் செய்யவில்லையே ஏன் எனக்கு இந்த சோதனை”, இவையாவும் பொதுவாக கூறப்படுபவை. என்னுடைய கர்மா என்பது என்ன? போன ஜென்ம கர்மா, இந்த ஜன்ம கர்மா, எதிர்வரும் ஜென்ம வினைகள் என்னவோ, என்ற கவலைகள் பொதுவாக மனதில் எழுபவை. கர்மா என்பது வினை ஆற்றல். நான் செய்கிறேன் என்ற கருத்து நிலைப்பாடு. இது அகந்தையினால் எழுகின்றது. அகந்தை என்றால் என்ன?

### ஆன்மா அகந்தை, கயிறு பாம்பு

ஒரு கயிறு சில நேரங்களில் பாம்பு போன்ற ஒரு பொய்த்தோற்றம் தருவதுண்டு. அச்சமின்றி இது என்ன என்று விசாரம் செய்தால் அது பாம்பு அல்ல ஒரு மாயத் தோற்றம். கயிறுதான் இந்த மாயத் தோற்றத்தை காண்பித்து உள்ளது என்று அறியலாம். கயிறு இல்லையேல் பொய்த் தோற்றமும் இல்லை. கயிறு பொய் தோற்றமாகிய பாம்பை ஒளிர்விக்கிறது எனலாம்.

தானாக ஒளிராதது பாம்பு தோற்றம். மேலும் பாம்பும் கயிறும் ஒரே நேரத்தில் காண்பது என்பது இயலாதது. பாம்பு தோற்றம் மறைந்த அந்தக்ஷணமே கயிறு விளங்கும். இது ஒரு உதாரணமே. பகவானைப் போன்று ஆன்ம விளக்கத்தை மிக எளிமையாக வேறு யாராவது விளக்கி உள்ளார்களா என்று தெரியவில்லை. ஒவ்வொருவருக்கும் இருக்கும் இருப்பு உணர்வை வைத்து பெரியதாக விளக்கப் படும் ஆன்ம வித்தையை எளிதாக “உள்ளது நாற்பது” என்னும் தெய்வீக நூலில் தானாக விளங்க வேண்டிய பொருளாக விளக்குகிறார் .

**“உள்ளது அலது உள்ள உணர்வு உள்ளதோ !**
**உள்ள பொருள் உள்ளல் அற உள்ளத்தே உள்ளதால்....”**
**- உள்ளது நாற்பது (மங்கல வெண்பா)**

*உள்ளதாகிய மெய்ப்பொருள் ஒன்று இருந்தால் அன்றி "நான் இருக்கிறேன்" என்ற இருப்பு உணர்வு தோன்றாது. (கயிறு இன்றி பாம்பு தோற்றம் இல்லை).*

*அந்த சத்திய வஸ்து மனதின் எண்ணங்கள் அற்ற இதயத்தில் உள்ளது. அதாவது அகந்தை அற்ற, இரண்டற்ற நிலையில் உள்ளது. அகந்தை எனும் திரை உள்ளவரை ஆன்மா விளங்காது. ஆன்மா விளங்கிய அக்கணமே அகந்தை அற்றுப் போகும். பிறப்பு அறுபட்ட ஆன்ம நிலை.*

*"நான் இந்த உடல்" என்ற பொய்யான அபிமானம் கொள்பவரை ஜீவன் என்று கூறப்படுகிறது. ஜீவர்கள் "நான்" என்று உணர்வது உள்ள வஸ்துவான மெய்ப்பொருளை அல்ல. ஒவ்வொருவரும் தன் உடலைப் பார்த்தே நான் என்கிறோம். அடுத்து உள்ளவர்களின் உடலைப் பார்த்து "நான்" என்று உணர்வதில்லை. ஞானிக்கும் அஞ்ஞானிக்கும் உள்ள வித்தியாசம் இதுவே. ஞானிக்கு எல்லாமே "தான்". அஞ்ஞானிக்கோ தன் உடல் அளவே "நான்". ஆன்ம நிலை நமது இயல்பு நிலை. ஆன்ம நிலை எண்ணங்கள் (அகந்தை) அற்ற நிலை. ஆன்ம நிலை அதற்கு அந்நியமாக ஒன்றும் இல்லாத, வேறுபாடு அற்ற நிலை (Non dualistic state).*

*அகந்தை என்பது ஆன்மாவிலிருந்து இரண்டாகப் (dual) பிரிதல் ஆகும். பொய்யான "நான் இந்த உடல்" என்பதே அகந்தையின் அடிப்படைப் பிரிவு. அடிப்படையில் இரண்டு என்றாலேயே அகந்தை. அகந்தை என்று ஒன்று உண்மையில் இல்லை. எது தோன்றி மறைகிறதோ அதையே மாயை என்கிறோம். அகந்தை தோன்றி மறையும் ஒரு மாயையே. அதாவது ஏகனாகிய ஆன்மா, இரண்டாக, பலவாக பரிணாமத் தோற்றம் அளிக்கிறது. பல பிறவிகள் உயிர் அகந்தையாக உடல் எடுக்கின்றன. இந்த அகந்தை தோற்றம் உடல் இல்லாமல் இருக்காது. அகந்தையின்*

உருவே இந்த உடல். உடல் மரணித்தால் உயிர் அகந்தை வேறு ஒரு உடல் எடுக்கும். இது மறுபிறப்பு. பிறப்பும் இறப்பும் ஒரு சுழற்சியாகத் தொடரும். இந்த தொடர்ச்சி எதுவரை?

அதாவது உயிர் அகந்தை அதன் மூலமாகிய ஆன்மாவில் மீண்டும் ஒடுங்கி ஒன்றாதல் வரை. இதுவே தன்மயம் ஆதல், ஆன்மாவாதல், ஆன்மா விளங்குதல் எனப்படுகிறது. பாம்புத் தோற்றம் அதற்கு ஆதாரமாக உள்ள கயிற்றில் அடங்குதல் போன்று. ஆன்மாவை உணர முடியாது மறைப்பது அதனில் இருந்து எழுந்த "நான்", எனும் பொய் அகந்தையே. அகந்தை இருந்தால் ஆன்மா விளங்காது. அகந்தை இன்றேல் "உள்ள" பொருள் விளங்கும். பிறவிச் சுழல் ஓயும்.

இதனை யார் அலைந்து திரியும் உயிர்களுக்கு "நீ பிறப்பிடத்திற்கு செல்ல வேண்டும்" என்று உணர்த்துவது. ஜீவன் தன் இருப்பிடத்திற்கு சென்றாலே துன்பங்கள் ஓயும்.

பிறக்கும் ஒவ்வொரு ஜீவனும் இறந்தே ஆக வேண்டும். இந்த உடலை "நான்" என்று அபிமானிக்கும் உயிர்கள் ஜீவன் எனப்படுவர். இந்த பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் மனிதன் எத்தனையோ வினைகளை ஆற்றுகிறான் அவனுக்கு இன்ப துன்பங்கள் மாறி மாறி வருகின்றன. தான் அனுபவிக்கும் அனைத்தும் தன் விதிப் பயன் என்பதாகக் கொள்கிறான். பிறக்கும் ஜீவர்கள் அனைவரும் இறத்தல் மற்றும் இறக்கும் உயிர்கள் மீண்டும் பிறப்பது இதுவே விதி. விதி என்பது ஊழ் என்றும் கூறப்படும். பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையில் ஏற்படும் எல்லா துன்பங்களும் இறைவனால் கருணைகொண்டு அளிக்கப்படுபவை.

"கருணையால் என்னை ஆண்ட நீ எனக்கு உன்
காட்சி தந்து அருளிலை என்றால்

*இருள் நலி உலகில் ஏங்கியே பதைத்து இவ்*
*வுடல் விடில் என் கதி என்னாம்"*

*- பகவான் ஸ்ரீ ரமணர் அருளிய அருணாசல பதிகம்*

உயிர்கள் தாமாக ஆன்மாவை அடைய முடியாது . அருள் ஆற்றுதல் ஒன்றையே தன் காரியமாகக் கொண்ட ஆன்மாவின் கருணையால் ஆட்கொள்ளப் படுதல் மட்டுமே உயிர்களுக்கு சாத்தியம். ஆன்மாவினின்று பிரிந்து பிறவிச்சுழலில் சிக்கித் தவிக்கும் உயிர்கள் திசை மாறி தாங்கள் தானாக ஆன்மாவிற்கு திரும்புதல் அறியாமல் உழல்கின்றன. ஆன்மாவின் காட்சியை உயிர் அகந்தை மறைக்கிறது. அந்த அகந்தை திரை மறைப்பது தெரியாமல் தத்தளிக்கும் ஜீவர்களுக்கு துன்பம் என்னும் ஒன்று கொடுக்கப்படுகிறது.

பக்குவமான ஜீவர்கள் அந்த கஷ்டம் யாருக்கு, எதற்கு என்று விசாரணை செய்தால், அது தனக்கு என்று அறியப்படும். தனக்கு ஏன் அந்த கஷ்டம் என்று பார்த்தால் அது தனது "நான் செய்கிறேன்" என்ற செய்வினையால் என்று தெளிவு கிடைக்கும். நான் செய்யவில்லை எல்லாம் அவன் செயல் என்று பயிற்சி மேற்கொண்டால், அது அகந்தை எனும் திரை விலகலுக்கு உறுதுணை ஆக அமையும். செய் வினை சுடாமல் உய்யும் வகை பிறக்கும். அருணாசல அக்ஷரமணமாலையில், "வந்து என் படிஅள, வருந்திடு உன் தலை விதி அருணாசலா" என்றும், நான் செய்கிறேன் என்ற செய்வினை சுடாது நீயாக செய்து உய்விப்பாய் என்னை என்பதாக , "செய்வினை சுடுமலால் உய்வகை ஏது உரை அருணாசலா", என கூறப்படுகிறது. மாளும் இத் தேகம் நான் என்னும் மாயை அருளினால் அகலும். ஆன்மா விளங்கும். அதன் பின் பிறவிப் பெருங்கடல் நீந்தி கரை சேரலாம்.

இங்கு பகவானின் சீரிய தொண்டர்களில் ஒருவரான தேவராஜ முதலியார் அவர்கள் தனக்கு பகவானுடன்

ஏற்பட்ட அனுபவங்களை "தாயும் நீயே தந்தையும் நீயே" என்ற அவர்தம் நூலில் பகிர்ந்து கொண்டுள்ளார். அதன் சிறு பகுதியை இங்கு நினைவு சேர்க்கிறோம்:

ஒரு தந்தை தன் குழந்தையைத் திருத்தி நல்வழிப்படுத்தி காப்பதற்கு வேறு வழியின்றி அக்குழந்தையைத் துன்பத்திற்கு ஆளாக்க வேண்டியது என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. சர்வ சக்திமானாகவும், சர்வ ஜீவனேசனாகவும் உள்ள இறைவன் நம்மை எவ்விதத் துன்பத்திற்கும் ஆளாகாமல் ஆன்மீக முன்னேற்றம் அடையச் செய்ய வல்லவனாக இருக்க வேண்டும் அல்லவா?" என்று கேட்கிறார்.

பகவான் அதற்கு, "நாம் என்ன சொல்லமுடியும்? அதுதான் அவருடைய திட்டம்"என்றார். "யார் இந்தத் தீமையையும் துன்பத்தையும் காண்கிறார்கள்? ஆழ்ந்த தூக்கத்தில் அவை இருந்தனவா? முதலில் உன் உண்மை சொரூபத்தை நீ அறிந்துகொள். அதன் பின்னர் தீமையும் துன்பமும் உனக்குத் தோன்றினால் கடவுள் அவற்றை ஏன் அனுமதிக்கிறார் என்று கேட்கலாம்" என்றும் பகவான் ரமணர் விடையளித்தார்.

அருளினால் எந்த அளவிற்குப் பிராரப்தத்தை வெற்றி கொள்ள முடியும்? மேலும் ஒருவன் செய்யும் செயலுக்கு ஏற்ற அளவில்தான் பயன்கிட்டும் என்றால் அருள் என்பதற்கே இடமில்லாமல் போய்விடுமே என்ற தேவராஜா முதலியார் அவர்களின் சந்தேகங்களுக்கு ரமணர் மௌனமாகவே இருப்பாராம். இதுபோன்ற சந்தேகங்களுக்கு பகவான் பல்வேறு சமயங்களில் கூறியவற்றை தேவராஜ முதலியார் அவர்கள் பின்வருமாறு இருந்ததாக தொகுத்து அளிக்கிறார்:

"கடவுளால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை. ஆனால் கடவுள் வகுத்த நியதியின் படி எல்லாம் நடக்கின்றன. இந்த நியதிக்கு விதிவிலக்குகள் மிகவும் சிலவே. நம்முடைய புராணங்களில் கூட எத்தனை

*மார்க்கண்டேயர்கள் இருக்கிறார்கள்?" மார்க்கண்டேயர் தன்பால் ஏற்றப்பட்ட இறப்பு எனும் சாவூழை தனது அனனிய பக்தியினால் வெற்றிகொண்டதை பகவான் இங்கு குறிப்பிட்டுள்ளார். நாமும் முயற்சி செய்ய வேண்டும்; பரபக்தி, அதாவது எதையும் எதிர்பார்க்காது பக்தி செலுத்த வேண்டும். குருவும் உதவ வேண்டும். இரண்டுமே அவசியம்.*

*"கருத்தனுக்கு ஆக்கும் நிட்காமிய கர்மம் கருத்தைத் திருத்தி அஃது கதிவழி காண்பிக்கும்", என்பது பகவான் உபதேச உந்தியாரில் அருளியுள்ளார். நான் செய்கிறேன் என்ற கருத்தோடு, காரியங்கள் ஆற்றினால் அது மீண்டும் வினை கடலில் ஆழ்த்தி வீடுபேறு அருளாது. செய்பவை அனைத்தும் இறைவனுக்கே அர்ப்பணித்து காரியங்கள் ஆற்றல் (கர்ம யோகம்), மற்றும் பலன் கருதாது செலுத்தும் பக்தி (பக்தி யோகம்) இரண்டும் வீடு பேறு அடைய நேர்வழி அருளும்.*

*"மடாது போல் பாவம் செய்வாரை நிழல் போல*
*விடாது போய் பற்றும் விதியின் விளைவே*
*விழுத்தொழும்பர் சும்மை எழுத்தழிய மாய்க்கும்*
*எழுத்து அறியும் பெம்மானின் இணையடியே*
*எண்ணமாய்*

*மார்க்கண்ட மாணி தன மார் ஏற்ற சாவூழை*
*மேற்கொண்ட பக்தியாம் மிக்க விரகாலே - (496)*
*நியதி தனக்கோர் நியாமகனாம் தன்பால்*
*அயர்தியறு நெஞ்சத்து அருளின் மதவலி கொண்டு*
*ஊழால் உலைவுறாது உப்பக்கம் காண அதைத்*
*தாழாது உஞற்றும் தருகணார் தம் தருக்கே" - (500)*
*- ரமணபுராணம்*

*எல்லாமே விதிப்படிதான்*

*தேவராஜா முதலியார் ஒருமுறை பகவான் ரமணரிடம், ஜீவர்களின் வாழ்வின் அனைத்து நிகழ்வுகள் சிரியன,பெரியன எல்லாமே முன்கூட்டியே பிறக்கும்*

போதே தீர்மானிக்கப்படுகிறதா? உதாரணமாக இப்பொழுது நான் விசிறி கொண்டு வீசுவதும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டே நடைபெறுகிறதா என்று கேட்டாராம். அதற்கு பகவான் "ஆம், நிச்சயமாக. இந்த உடல் என்னென்ன செய்யவேண்டும், என்னென்ன அனுபவங்களை பெறவேண்டும் என்பவை அனைத்தும் உடல் தோன்றிய உடனேயே தீர்மானிக்கப்பட்டுவிட்டன", என்று கூறினாராம்.

அப்படியானால் உயிர்களுக்கு என்னதான் சுதந்திரம் உள்ளது என்று தேவராஜா முதலியார் அதிர்ச்சியும் ஆசீரையுமாகக் கேட்டாராம். அதற்கு பகவான் ரமணர், "முயற்சி செய்து அதன் பயனாய் ஞானம் பெறுவதற்கு மட்டுமே ஜீவர்களுக்கு சுதந்திரம் உண்டு. இவ்வாறு ஞானம் பெறும் போது தேகம் நான் என்னும் பாவம் ஒழியும். உடலானது அதற்குப் பிராரப்தத்தால் விதிக்கப்பட்ட அனுபவங்களை அடைந்தே தீரும். அவற்றைத் தவிர்ப்பது இயலாது. எனவே ஒருவன் தன்னை உடலாகக் கருதிக்கொண்டு (அஞ்ஞான நிலை) அதன் செயல்களால் விளையும் பலன்களில் பற்று உள்ளவனாக இருக்கலாம். அல்லது உடலை நான் என்று பற்றாமல் (ஞான நிலை) அதன் செயல்களுக்குச் சாட்சி மாத்திரமாக இருக்கலாம்" என்றாராம்.

கருத்துச் சுருக்கம்

விதி என்பது, பிறக்கும் அனைத்தும் இறத்தல். இறந்து பின் மீண்டும் பிறத்தல். ஜனனம் மரணம் பிறகும் ஜனனம் இதை "நான்" இனி வேண்டவில்லை என்றால், இவற்றின் மூலமாகிய ஆன்மாவை உணர்தல் ஒன்றே வழி. அப்படி உணராது தடுப்பது அகந்தை. அகந்தை என்றால், உடல் நான் என்னும் பொய் உணர்வு, எனது என்னும் பொய்யான உடைமை உணர்வு பின்னர் நான் செய்கிறேன் என்ற போலித்தன்மை. இந்த திரையை அறிந்தவர்கள், அதை போக்கவேண்டும்

*என்பவர்கள் பக்குவிகள். மற்றவர்களுக்கு அந்த விவேகம் கிடைக்கவேண்டி கருணையினால் இறைவன் துன்பங்களை கொடுக்கிறார். துன்பங்கள் ஏன் என்று அவர்கள் விசாரித்து அகந்தையே துன்பங்களுக்கு காரணம் என்று அறிய வேண்டும். பின்னர் அகந்தை திரை விலக தன முயற்சியுடன் இறை அருளை வேண்டி, இறை அருளால் தடுத்தது ஆட்கொள்ளப் படுதல் வேண்டும். இதுவே மரணம் என்னும் ஊழை வெல்லுதல் ஆகும்.*

*நமோ ரமணாய நலம் பெற வாழ்க!*

*விமோசன மெய்யன் விரை மலர்த்தாள் வாழ்க!*

**ரமணோதய அன்பர்களுக்கு**
**ஓர் அன்பான வேண்டுகோள்**

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்.


SRI RAMANASRAMAM
OFFICE

# அண்ணாமலை சாரலில் ஸ்ரீ ரமணாச்ரமம்

பகவானிடம் தமக்கு என்று ஒரு சங்கல்பமோ, சரணாகதி செய்வதற்கு எஞ்சியிருந்த தனித்தன்மையோ இருந்ததாகக் கூறுவது கடினம். அந்த அளவிற்கு பகவான் பரமேஸ்வர சக்தியுடன் முழுமையாக ஒன்றி இருந்தார் . எனினும் வாழ்க்கையில் சில சமயங்களில் சில நிகழ்வுகளின் போது பகவான் சில முடிவுகளை தெய்வ இச்சைக்கே விட்டு, தாம் அதற்கு முற்றிலும் கீழ்படிந்தவராக இருந்தார். மலையடிவாரத்தில் ஆச்ரமம் நிறுவப்பட நேர்ந்ததே இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

இதைப்பற்றி அவர், "என் அன்னையின் மறைவிற்குப்பின் நான் அவ்வப்போது அவளது சாமதித் தலத்திற்கு வந்து விட்டுப் பின் ஸ்கந்தாஸ்ரமம் திரும்புவது வழக்கம். தாயார் மறைந்து ஆறு மாதங்கள் கழித்து வழக்கம் போல் ஒருநாள் சமாதித் தலத்திற்குச் சென்று அமர்ந்திருந்தேன். சற்று நேரத்திற்கு பின் எழுந்து ஸ்கந்தாஸ்ரமம் திரும்பக் கருதியபோது ஏதோ ஒன்று என்னிடம் நான் ஸ்கந்தாஸ்ரமம் திரும்பாமல் இந்த இடத்திலேயே இருக்க வேண்டும் என்று உணர்த்தியது. என் கால்கள் எழுந்திருக்க மறுத்தன என்றே தோன்றியது. எனவே நான் இங்கேயே தங்கிவிட்டேன். இப்படித்தான் தற்போதைய ஆச்ரமம் தொடங்கியது. இவையெல்லாம் வளரும் என்று யாருக்குத் தெரியும்?" என்று கூறினார். திருவருள் இயக்கம் என்னும் காற்றின் முன்னர் பகவான் காய்ந்த சருகைப்போல் இருந்து, அது எப்படி எங்கே தம்மை அழைத்துச் செல்ல விரும்பியதோ அப்படி அங்கே சென்றார்.

மேலே கொடுக்கப்பட்ட வரிகள் பகவானின் சிறந்த தொண்டர்களில் ஒருவரான தேவராஜ முதலியார்

அவர்கள் “தாயும் நீயே தந்தையும் நீயே” என்ற நூலில் பதிவு செய்துள்ளார். பகவானை ஈர்த்து அவரை தன் போல் ஆக்கியது அருணாசலம். அருணாசலத்திலும் தாயார் சன்னிதியில் பகவானை ஈர்த்து அமர்த்தியது அண்ணாமலையார். அதுவே ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் துவக்கமாகும். ரமணனின் ஸ்தூல உடல் தாங்கிய சமாதி திருக்கோயில் பிற்காலத்தில் ஏற்பட்டதும் இங்குதான்.

இந்த ஆண்டு ஸ்ரீ ரமணாஸ்ரமம் உருவாகி நூறு ஆண்டுகள் ஆகிவிட்டன. அப்பன் அண்ணாமலையார் தனது புதல்வனான ரமணனை தன்பால் ஈர்த்து தன்னைப்போல் அசலமாய் செய்து, அவரை ஆடாது அமர் நிலை அச்சாணியாக வைத்து, அவர் மூலம் உலகம் முழுவதும் பக்தர்களை ஈர்த்து, பக்தர்களை அண்ணாமலையை சுற்றி பம்பரமாய் சுழலவிட்டு உள்ளார்.

இன்றைய காலகட்டத்தில் இது ஒரு மகா பெரிய வழிகாட்டுதலுடன் கூடிய நிகழ்வு. ரமணாஸ்ரமம் துவங்கி நூறு ஆண்டுகள் கடந்துவிட்டன. வெப்பம் தகிக்கும் உலக வாழ்க்கையாகிய பாலைவனத்தில், குளிர் மரமாக, தன் அடியிற்கூடும் அண்ணாமலை அன்பர்களுக்கு பாகுபாடுகள் ஏதுமின்றி ஸ்ரீ ரமணர் ஸ்ரீ ரமணாஸ்ரமத்திலிருந்து அருள்பாலிக்கிறார். ஸ்ரீ ரமணாஸ்ரமத்தின் நூற்றாண்டு விழா உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு, 17 ஆகஸ்ட் 2024 சனிக்கிழமை சென்னையில் திரளான அன்பர்கள் கூடி கொண்டாட உள்ளோம். இந்த ஒரு நாள் நாம் சென்னையில் கூடி நம் நன்றியை காணிக்கையாக வைக்க திரள்வோம் வாரீர்!

அன்புடன் வாருங்கள் என்று அழைக்கிறோம்...



# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### மஹா பூஜை

*பகவான் ரமண மகரிஷிகளின் அன்னை அழகம்மை சமாதி தினம் மஹா பூஜையாக ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அனுசரிக்கப்படுகின்றது. இவ்வாண்டு 31/5/2024 வெள்ளிக்கிழமையன்று ஆச்ரமத்தில் அமைந்துள்ள மாத்ருபூதேஸ்வரர் ஆலயத்தில் (தாயார் சந்நிதி) மஹா பூஜை சிறப்பாக நடைபெற்றது.*

*மகனின் திருக்கரத்தால் முக்தியடையும் பேறுபெற்ற அழகம்மையின் சமாதி ஆலயமான மாத்ருபூதேச்வரர் ஆலயம் பல வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் மற்றும் பூஜைகள் நடைபெற்றன.*

*சென்னை ரமண கேந்திரம், குரோம்பேட்டை ரமணாலயம், மற்றும் இராமநாதபுரம் முருகனார் மந்திரம் ஆகிய இடங்களிலும் இவ்விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. குரோம்பேட்டை ரமணாலயத்தில் நடைபெற்ற திருவாசக முற்றோதலில் நூற்றுக்கும் மேலான ரமண அன்பர்கள் முழு நேரமும் அமர்ந்து ஆத்மார்த்தமாக பாராயணத்தில் ஈடுபட்டது சிறப்பம்சம். அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. மயிலாப்பூர் ஸ்ரீ ரமண கேந்திரத்தில் அடுத்தநாள் திருவாசக முற்றோதம் நடைபெற்றது. திரு. சத்குருநாத ஓதுவார் சந்நிதிமுறை பன்னிசையுடன் பாடி மகிழ்வித்தார். திரளாக பக்தர்கள் கலந்து கொண்டனர்.*

## பசு லக்ஷ்மி ஆராதனை - 2024

*பசு லட்சுமியின் ஆராதனை 18-6-2024, செவ்வாய்க்கிழமையன்று ஆச்ரமத்தில் அமைந்துள்ள பசு லக்ஷ்மி சமாதியில் சிறப்பாக நடந்தேறியது. சிறப்புற அலங்கரிக்கப்பட்ட பசு லக்ஷ்மி சமாதிக்கு விசேஷ பூஜைகள் மற்றும் பசு லக்ஷ்மியின் மேல் பகவான் இயற்றிய வெண்பா, மணவாசி ராமசாமி ஐயர் இயற்றிய பாடல் மற்றும் பிரத்யேகமாக பசு லக்ஷ்மிக்கென பக்தர்கள் இயற்றிய பாடல்களைப் பாடி அன்பர்கள் பசு லக்ஷ்மியை வழிபட்டனர்.*



*சென்னை ரமண கேந்திரம் மற்றும் ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட குரோம்பேட்டை ரமணாலயத்திலும் பசு லக்ஷ்மி தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.*

## புதிய ரமண மையம், சென்னை

*ஒரு புதிய ரமண மையம், சென்னை, தியாகராய நகர் பகுதியில் கீழ்க்கண்ட விலாசத்தில் துவக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ரமண ஆஸ்ரமத்தை ஒட்டி தமிழ் பாராயணம், இந்த தியான மையத்தில் நடைபெறும். சென்னை மற்றும், மையம் ஒட்டி உள்ள பொதுமக்களும், ரமண அன்பர்களும் பயன்பெற அழைப்பு விடுக்கப்படுகிறது.*

*ரமணாலயம்- தியாகராய நகர், 83/2 அப்துல் அசிஸ் தெரு, தியாகராய நகர் , சென்னை 600017 (மனோகரன் தெரு சந்திக்கும் முலை, தெற்கு போக் சாலை பின்புறம்).*

## முருகனார் 50 ஆவது ஆராதனை விழா

*ஸ்ரீ முருகனாரின் 50 ஆவது ஆராதனை விழா 2/9/2024 திங்கட்கிழமையன்று ரமண அன்பர்களால் கொண்டாடப்படவுள்ளது.*





*பகவானின் பழம்பெரும் பக்தரான திரு. N. R. கிருஷ்ணமூர்த்தி ஐயரின் பேரனும் ஆச்ரம முன்னாள் ஆடிட்டர் திரு. ரமணன் அவர்களின் புதல்வருமான திரு. ரெங்கநாதநாகராஜன் கடந்த மே மாதம் 15 ஆம் நாள் இரவு 11 மணியளவில் அருணாசல ரமண பதமடைந்தார்.*

*திரு. ரெங்கநாதநாகராஜன் அவர்களும் அவரது தந்தையாரைப் போலவே ஆச்ரம ஆடிட்டராக சுமார் இருபது ஆண்டுகள் பணியாற்றினார். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு ரமணயோதயம் ஆழ்ந்த இரங்கரைத் தெரிவித்துக் கொள்கிறது.*

---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

*Printed and Published by:* A. Kumar Raja,
20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.

OM NAMO BHAGAVATHE SRI RAMANAYA

CENTENARY CELEBRATIONS OF

# SRI RAMANASRAMAM

100 YEARS
1922 - 2022
SRI RAMANASRAMAM TIRUVANNAMALAI
CENTENARY CELEBRATIONS

17 AUGUST 2024 | SATURDAY | 9:30 AM – 1:00 PM

Venue: **Kuchalambal Kalyana Mantapam**
No 24, Mc Nicholas Road, Chetpet, Chennai - 600031
(Near Mehta Hospital & Chetpet Flyover)

## *PROGRAM*

Lighting of Lamp

Chanting of **AKSHARA MANA MALAI**

Introduction : **Dr. VENKAT S RAMANAN**
President, Sri Ramanashramam, Tiruvanamalai

Talk by **ISAIGNANI ILAIYARAAJA**

Music Concert by **SIKKIL GURUCHARAN** & Group

Felicitation

Followed by lunch

Registered with the Registrar of Newspaper for India  RNI No.:TNTAM/2001/5542

